Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



(C/490)

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 23 திங்கட்கிழமை (07.03.2011) | பக்கங்கள் 12 +IV | ஓசை – 158



## ஈ.பி.டி.பியின் கொள்கையை விளக்கும் "தேவாவின் கானங்கள்" இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கடந்தகால சாதனைகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை பாடல்கள் ஊடாக எடுத்துக் கூறும் முகமாக 'தேவாவின் கானங்கள்' எனும் இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் சர்வதேச இணை அமைப்பாளர் தோழர் விந்தன் அவர்களின் முயற்சியினாலும் பல்வேறு கவிஞர்கள் இசைவிற்பனர்கள் ஆகியோரின் பங்களிப்புடனும் உருவாக்கம் பெற்றுள்ள மேற்படி இறுவட்டு வெளியீடானது நேற்றையதினம் ஈ.பி.டி.பி.யின் யாழ். தலைமைப் பணிமனையில் இடம்பெற்றபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

தேவாவின் கானங்கள் வெளியிடப்பட்டு அதன் முதல் இறுவட்டானது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் மற்றும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட (11 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைமீது பொருளாதார அழுத்தம்; ஐரோப்பிய நாடுகளின் முன்முயற்சி

(கொழும்பு)

**புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை நடாத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் முகமாக ஐரோப்பியநாடுகள் சில இலங்கை மீது பொருளாதாரத்தடைகளை விதிப்பது குறித்து முன்முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.**

இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு சில ஐரோப்பிய நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்க செனட் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு நிகரான தீர்மானமொன்றை சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நிறைவேற்ற முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணைகளை நடத்த வேண்டுமென வலியுறுத்தும் நோக்கில் அழுத்தங்களை பிரயோகிக்க குறித்த நாடுகள் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொருளாதாரத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மகளிர் தினம்; யாழ். நகரில் விசேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டுத்துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், யாழ். மாநகராட்சி மன்றமும் இணைந்து நடாத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை முற்பகல் 9.00 மணிக்கு யாழ். மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவவிருந்தினராக வடமாகாண ஆளுனர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி; சட்ட மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பு


(கொழும்பு)

ஐந்து சர்வதேச பல்கலைக்கழகங்களை இலங்கையில் அமைப்பதற்கான திட்டங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னரே அப்பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் தரப்பாதுகாப்பு, தகுதிசார் வேலைத் திட்டங்கள் என்பவற்றை கருத்திற் கொண்டே பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி அளிக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது புதிய சட்டமூலம் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் (11 ஆம் பக்கம் பார்க்க)

## சிரேஷ்ட ஊடகவியலாளர் சபாரத்தினம் காலமானார்



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் தம்பையா சபாரத்தினம் தனது 79ஆவது வயதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் டெய்லி நியூஸின் முன்னாள் செய்தி ஆசிரியரும், தினகரனின் முன்னாள் பிரதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்போக்குவரத்தைக் கண்காணிக்க அறிமுகமாகிறது செய்மதி தொழில்நுட்பம்

(கொழும்பு)

கடுகதி வேகத்தில் சென்று போக்குவரத்து விதிகளை மீறும் தனியார் பஸ்சாரதிகளைக் கண்காணிப்பதற்கு செய்மதித் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

அதிவேகமாகப் பயணம் செய்யும் பஸ்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதளவு மெதுவாக பயணம் செய்யும் பஸ்களையும் தரிப்பிடங்களைப் புறக்கணிக்கும் பஸ்கள் மற்றும் நீண்டநேரமாக தரிப்பிடத்தில் நிற்கும் பஸ்களையும் கண்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே!**


☞ உள்ளே கல்வி முரசு.

♦ **தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 பகுதி I இன் பயிற்சி வினாத்தாள இணைக்கப்பட்டுள்ளது.**

**உலகை உலுக்கிய விக்கிலீக்ஸ் விவகாரம்**

## அமெரிக்க இரகசியங்கள் விற்பனை; சூத்திரதாரியான இராணுவ வீரர் கைது!

### இவருக்குத்தண்டனை நிர்வாண நித்திரை



(வோஷிங்டன்)

வீக்கிலீக்ஸ் இணையதளத்துக்கு, இராணுவ இரகசியங்களைக் கொடுத்ததாக கைது செய்யப்பட்டவரை, வாரத்துக்கு குறைந்தது ஒரு நாளாவது ஆடைகள் இல்லாமல் தூங்கும்படி அமெரிக்க சிறை அதிகாரிகள் தண்டனை அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்தாண்டின் இறுதியில் வீக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் (11 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் வீடுகளை உரியவரிடம் ஒப்படையுங்கள்

### அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

வடபகுதியில் யுத்த நடவடிக்கைகளின்போது கைப்பற்றப்பட்டுள்ள 1,202 வீடுகளையும் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு அரசாங்கத்திடம் மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது. கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

வீட்டு உரிமையாளர்களிடம் மேற்படி வீடுகளை அரசாங்கம் கையளிக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தம் (11 ஆம் பக்கம் பார்க்க)



# சாவகச்சேரி பேருந்து நிலையம், நூலகத்தை திறந்துவைத்தார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளின் வளர்ச்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் அமைக்கப் பெற்ற புதிய பேருந்து நிலையத் திறப்பு நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகள் தமது முழுமையான சேவைகளை வழங்க முடியாத சூழல் இருந்து வந்தது. ஆனால் அந்த நிலை மாறி தற்போது ஒரு அமைதி சூழல் நிலவுகின்றது. இந்நிலையில் உள்ளூராட்சி சபைகளினது செயற்பாடுகள் மக்கள் பயன் பெறக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

அந்த வகையில் உள்ளூராட்சி சபைகளினது வளர்ச்சியிலும் அது சார்ந்த மக்கள் பணிகளிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

முன்பதாக பேருந்து நிலையத்தை அமைச்சர் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன், நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், ஈ.பி.டி.பி. யின் சாவகச்சேரிப் பிரதேச அமைப்பாளர் வலன்டைன், பிரதேச செயலாளர் திருமதி சாந்தசீலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நகராட்சி மன்றத்தால் நுணாவிலில் அமைக்கப்பட்ட புதிய நூலகத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திறந்து வைத்தார்.

அங்கு சென்ற அமைச்சர் அவர்களை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்றதைத் தொடர்ந்து புதிய கட்டடத்தை அமைச்சர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து அங்கிருந்த மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் அவர்கள், அம்மக்களது தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அதன் போது குடிநீரைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் குறித்து மக்களுக்கு எடுத்து விளக்கினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் விரைவில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் சாந்தசீலன், ஈ,பி.டி.பி. யின் சாவகச்சேரிப் பிரதேச அமைப்பாளர் வலன்ரைன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வான்பகுதி அகலமாக்க வேண்டும்; வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் வான்பகுதி அகலமாக்கப்பட வேண்டும் என மீனவர்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமியின் தாக்கம் ஏற்பட்டதன் பின்னர் படகுகள் கட்டப்படும் வான்பகுதிகள் சேதமடைந்ததையடுத்து அப்பகுதிகளில் படகுகள் கட்டமுடியாமலும், போக்குவரத்தை செய்யமுடியாமல் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பணி வல்வெட்டித்துறை பகுதியில் நடைபெற்றபோதிலும் பின்னர் தடுத்துநிறுத்தப்பட்டதால் பொலிகண்டியிலிருந்து கற்கோவளம் வரையான வான்பகுதி அகலமாக்கப்படாததால் தாம் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர். (100)

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீளவும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை

## கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தகவல்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் காரணமாக இயங்க முடியாத நிலையில் இருந்த காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீண்டும் இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசவளம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சின் செயலாளர் வில்லி கமகே தெரிவித்துள்ளார்.

இந்த தொழிற்சாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுகின்ற பொழுதிலும், அதன் அபிவிருத்திப் பணிகளை அரசாங்கமே மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னர் பெரிய சீமெந்து தொழிற்சாலையாக இயங்கி வந்த காங்கேசன்துறை தொழிற்சாலையின் ஊடாக இலங்கைக்குத் தேவையான 50 சத வீதமான சீமெந்து விநியோகிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த தொழிற்சாலை உரிய முறையில் தொழிற்பட ஆரம்பிக்கப்பட்டதும், இலங்கையின் பொருளாதாரம் மேலும் மேம்படும் எனவும் செயலாளர் தெரிவித்தார்.

# ஏற்றுமதிமூலம் அதிக வருமானம்

(கொழும்பு)

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், சென்ற வருடத்தில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில், ஏற்றுமதி மூலம் அதிக வருவாய் கிடைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி 17.3 சத வீதத்தால் அதிகரித்துள்ளதுடன், 830 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் சேர்க்கப்பட்ட வருமானமாக கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையையடுத்தே ஏற்றுமதி நடவடிக்கைகள் மேம்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் இந்த வருடத்திற்கான ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருடாந்த உற்சவம்

(யாழ்.நிருபர்)

இலங்கை ஆதிவிஜய ஆஞ்சநேயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

காரைநகர் கசூரினா கடற்கரையில் அமைந்துள்ள இந்த ஆலயத் திருவிழாவில் உள்ளூர் அடியார்களும், கசூரினா சுற்றுலா மையத்துக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளும் பெருந்தொகையில் கலந்து கொண்டு சிறப்பித்து வருகின்றனர். (10)


60 வருட சேவை

கோலாகலத் திறப்பு விழா

ஹிஜ்ரி 1432 பிறை (2) ரபியுல் ஆகிர்
இன்று 07.03.2011 திங்கட்கிழமை காலை 10 மணியளவில்
கௌரவ யாழ். மாநகர சபை முதல்வர்
திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள்

மீண்டும் 20 வருடத்திற்கு பின்



பிளவ்ஸ் கிறீம் ஹவுஸ்

PILAWS CREAM HOUSE

என்னும் குளிர்பான ஸ்தாபனத்தைத் திறந்துவைக்கிறார்கள்.
வியாபாரத்தை R.இரத்தினேஸ்வரன் (நிர்வாக இயக்குநர், பிள்ளையார் இன்) ஆரம்பித்து வைக்கிறார்கள். அத்தருணம் தாங்களும் வருகைதந்து எமது ஸ்தாபனம் வளர்ச்சியடைய வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல 355, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0775976619, 0776252785

(C/499)

இங்ஙனம்
எம்.எல்.லாபிர் குடும்பத்தினர்.



உங்கள் அன்புச் செல்வங்களின்
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
தினமுரசில்
முற்றிலும் இலவசமாக!!




உங்கள் பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்.

தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச்செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மன மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன :- ..............................

பெற்றோர் ஒப்பம்.


## சிறு விளம்பரங்கள்


### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (017)

### விற்பனைக்கு

கட்டுமண் 1கியூப் - 11,000, அத்திவாரக்கருங்கல் 6X9, 1கியூப்- 9000, ஒரு அரிகல் 40 ரூபா, 3/4" கருங்கல்லு சல்லி ஒரு கியூப் -13000. அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக் கழிவு உண்டு. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்கும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 0776253719 (R/059)

கலை பொல்லாதது.பலருடைய வாழ்வை அழித்துப்பலியிட்டு வட்டு சிலருக்குமட்டும் வாழ்வு தருவது கலை. அதைச் செல்வம் உள்ளவர்கள் நம்பினால் பொழுதுபோக்காக வைத்துக் கொள ளலாம். ஏழைகள் நம்பக்கூடாது.

- மு.வரதராசனார் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## படிப்பினை உண்டு

நீண்ட காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவி வந்த கருத்து மோதல்கள் தற்போது உச்சக் கட்டம் அடைந்துள்ளதைக் காண முடிகிறது.

தமிழரசுக் கட்சி என்று ஒரு முகத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று மற்றொரு முகத்தையும் தமிழ் மக்களுக்குக் காட்டி அரசியல் நடத்தி வந்தனர்.

புலிகளிடம் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்களுக்கு "ஆமா சாமி" போட்ட இவர்கள், அவர்கள் அழிக்கப்பட்ட பின்னர் சேர்த்து வைத்திருந்தவர்களை ஓரங்கட்டினர்.

இன்று தமது கட்சி உறுப்பினர்களை ஏமாற்ற முற்பட்ட இவர்கள், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரனும், யோகேஸ்வரனும் கூட்டமைப்பின் தலைமை மீது பாய்ந்திருப்பது உட்கட்சிக் கருத்து மோதலின் உச்சக் கட்டத்தை எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுய அரசியல் லாபத்துக்காக எதனையும் செய்வதற்குத் தயங்கமாட்டார்கள் என்பது அவர்களின் கடந்த கால வரலாற்றுப் பாடங்கள் புகட்டும் உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிமாற்றம் தேவை என்று பிரசாரம் செய்தவர்கள், நாடாளுமன்றத் தேர்தலின்போது கட்சி அங்கத்தவர்களைப் புறந்தள்ளி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களாக இருந்தவர்களுக்கு இடம் கொடுத்து, பின்பு சேர்ந்திருந்தவர்களை ஓரங்கட்டியிருந்தமையை தமிழ்மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ஓரங்கட்டி வைத்தவர்களை எல்லாம் தம்முடன் அரவணைத்ததுடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்கி கூட்டமைப்பு என்றும், தமிழரசுக் கட்சி என்று சொல்வதுமான இவ் வேடதாரிகளை இனங்கண்டு மட்டக்களப்பு மாவட்டக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொதித்தெழுவது இயற்கையே.

ஜனநாயகத்தையும், ஒற்றுமையையும் உதட்டளவில் பேசி வந்த கூட்டமைப்பின் தலைமைப் பீடம், கொழும்பில் காரியாலயம் அமைத்து "குளு குளு" அறைகளில் இருந்தவாறு தீர்மானங்கள் எடுக்கும் அவர்களது வழமையானது செயற்பாட்டுக்கு பலத்த கண்டனங்களையும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகத்தையும், ஒற்றுமையையும் தமக்குள் கட்டிக்காக்க முடியாதவர்கள், ஒற்றுமைக் கோஷம் எழுப்புவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் ஒத்திவைப்பு அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும், அவர்களின் கூட்டுக்குள் பாரிய விரிசலை ஏற்படுத்தும் என அவர்கள் நிச்சயம் நினைத்திருக்க மாட்டார்கள்.

தேர்தல் காலங்களில் தேசியம், உரிமைக் கோஷங்களை, சுயநிர்ணயத்தை தமிழ்மக்களிடம் முன் வைத்தவர்கள், இன்று அரசிடம் கெஞ்சி மன்றாடி உள்ளூராட்சிச் சபைகளுக்கு அதிகாரம் வேண்டி பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

அரசுடனான இப்பேச்சுவார்த்தையானது அவர்களின் அரசியல் வங்குரோத்து நிலையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

தமிழ்மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்பதைத் தெரிந்து வைத்திருக்கும் கூட்டமைப்பினர், தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

மக்களை ஏமாற்றி, கட்சி உறுப்பினர்களை ஏமாற்றி தமிழ்மக்களின் ஒற்றுமையைச் சிதைக்க முற்பட்டுள்ள இவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம புகட்டுவார்கள் என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகிறோம்.

- ஆசிரியர்.

# கிளிநொச்சி விவசாயிகளின் பிரச்சினை; ஆராய இன்று உயர்மட்டக் கலந்துரையாடல்

### அமைச்சர் டக்ளஸ் கலந்து கொள்கிறார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் விவசாயப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ தேவானந்தாவிற்கும் கிளிநொச்சி மாவட்ட விவசாய பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த மாதத்தில் கிளிநொச்சியிலுள்ள பல்வேறு அமைப்புக்கள், அமைச்சர் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதன் விளைவாக அவ் அமைப்புக்களில் காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக அவ் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

தற்போது மக்கள் மீள்குடியேறி, வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் அந்த மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு சுமுகமான தீர்வு எட்டும் வகையிலேயே அமைச்சர் மட்டத்தில் இவ்வாறான சந்திபபுக்கள் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சந்திப்புக்களின் தொடர்ச்சியாக, விவசாயப்பிரச்சினைகளை ஆராயும் இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி வர்த்தகர்கள் சமூகமும் பல்வேறு சிக்கல்களை சமகாலத்தில் தாம் எதிர்கொண்டுவருகின்ற நிலையில் இந்த பிரச்சினைகள் தொடர்பாக பலதரப்பினருக்கும் அறிவித்தும் இது வரை எந்தவொரு தீர்க்கமான முடிவும் எடுக்கப்படாததால் இது தொடர்பாக தாம் அமைச்சருடன் சந்திப் பொன்று நடத்த விரும்புவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (28)

## புதிய செயற்குழு தெரிவு

(பருத்தித்துறை)

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலையத்தின் புதிய செயற்குழு அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

இதில் ப.ரகுநாதன் தலைவராகவும், திருமதி சரஸ்வதி தியாகராசா செயலாளராகவும், த.கிருபாகரன் பொருளாளராகவும், சி.தில்லைநாதன் உபதலைவராகவும், த.மதனரூபன் உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 6 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (109)

யாழ் கிறின் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும் பொதுக் கூட்டமும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில் ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்தவரும் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந்த் தலைவராக எகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எல்.நிர்மலன் செயலாளராகவும், து.றொபின்சன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## விஞ்ஞான முகாமைத்துவ நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின இளைப்பாறிய அதிபர் இ.சுப்பிரமணியம் எழுதிய "நவீன விஞ்ஞான முகாமைத்துவம்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் வீகே.அருந்தவநாதன் பிரதமவிருந்தினராகவும், யாழ்பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக் கிளை முகாமையாளர் வ.சண்முகநாத முதலி, யாழ்பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைநெறி பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, யாழ் பல்கலைக்கழக சந்தைப் படுத்தல் துறைத் தலைவர் இ.ரட்ணம் ஆகியோர் கௌரவவிருநதினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் தேவராஜாவும் ஆய்வுரையை இ.ரட்ணமும் வழங்கவுள்ளதுடன் நூலின் முதற் பிரதியை யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் நா.சுந்தரலிங்கம் பெற்றுக் கொள்ளவுள்ளதுடன் சிறப்புப் பிரதிகளை கூட்டுறவு சங்கத்தலைவர்கள் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (70)

## பருத்தித்துறை பிரதேச ஓய்வூதியர்களுக்கு பல்வேறு நன்மைகளுக்கு ஏற்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கு எதிர்காலத்தில் அனுகூலங்கள் பல கிடைக்கப்பெறவுள்ளதாக ஓய்வூதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் முதலாவது ஆண்டுக் கூட்டத்தில் இது குறித்த தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மரண பணிக்கொடை, புலமைபபரிசில், வைத்தியசாலை கொடுபபனவு, கண்வில்லை சத்திர சிகிச்சைக் கொடுப்பனவு ஆகிய அனுகூலங்களும், வைத்தியசாலைக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. (100)

## உணவகங்களில் சுகாதாரம் பேண பிரதேசசபை நடவடிக்கை!

(வடமராட்சி)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் காணப்படும் சுகாதார சீர்கேடுகள் தொடர்பாக பிரதேசசபை செயலாளா திருமதி த.அன்னலிங்கம் தலைமையில் ஆராயப்பட்டது.

பிரதேசசபை அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலின் போது உணவக உரிமையாளர்களுக கான சுகாதாரம் பேணுதல் சம்பந்தமாக ஆராயப்பட்டு உணவகங்களில் காணப்படுகின்ற குப்பைகள், உணவுக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் என்பவற்றின் சுத்திகரிப்புக்கு பிரதேசசபை வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதில் இருசாராருக்குமிடையே இணககம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் உணவக உரிமையாளர்கள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களாத்தினரும் கலந்து கொண்டனர். (108)

## ஆசிரிய நியமனம் இல்லை; பெற்றோர்கள் விசனம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளி/இந்துக் கல்லூரியில் மனைப்பொருளியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப் படவில்லையென பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மனைப்பொருளியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப் படாததால் கற்றல் செயற்பாடுகளில் மந்தநிலையினை எதிர்நோக்கியுள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்தனர்.

மனைப்பொருளியலுக்கு இரண்டு வருடங்களின் முன்னர் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டதாகவும், பின்னர் அவர் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டதாகவும் அறியமுடிகின்றது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப் பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)



பால்நிலை சமத்துவம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தில் நடைபெற்றபோது, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் அன்ரன் மாணவர்களுக்கு படங்கள் மூலம் விளக்கமளிப்பதைக் காணலாம். (21)

# வயல்வெளிகளில் இறந்த கால்நடைகள் புதைப்பதற்கு எவருமின்றத் துர்நாற்றம்

(அரியாலை)

மண்டைதீவுப் பகுதியில் கால்நடைகள் ஒருவித நோயினால் பீடிக்கப்பட்டு நடக்க முடியாது திடீரென வீழ்ந்து இறப்பதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மண்டைதீவுப் பகுதி விவசாயிகளின் விவசாய நிலங்களுக்கு இயற்கைப் பசளைகளைக் கொடுத்து வரும் இக் கால்நடைகளின் திடீர் இறப்பு அவர்களைப் பெரிதும் பாதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கால்நடைகளின் இறப்புக்குரிய காரணங்கள் தெரியவராத நிலையில் இந்தக் கால்நடைகள் புதைக்கப்படாமையினால் அவை வயல் வெளிகளில் கிடந்து துர்நாற்றம் வீசுவதாகவும், இதனால் அப்பகுதிகளின் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடைகளின் இறப்புக்குரிய காரணங்களை சம்பந்தப்பட்டவர்கள் கண்டுபிடிக்காத பட்சத்தில் அவற்றின் இறப்பு மேலும் அதிகரிக்குமெனவும் இதனால் மக்களுக்கும் தொற்று நோய் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தீவகத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இத் தொற்றுநோய் பரவும் அபாயம் இருப்பதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இது சம்பந்தமாக கிராம மக்கள் வேலணை பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கும், கால்நடை வைத்தியர் நிலையத்திற்கும் அறிவித்துள்ளதாகவும், உரிய நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் அவற்றின் இறப்பைக் கட்டுப்படுத்த முடியாது போய் விடும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (23)

# கதவுகள் இன்றிக் காணப்படும் வைத்தியசாலைக் கழிப்பறைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளில் கழிப்பறைகள் சுத்தமாகப் பேணப்படாது காணப்படுவதாக விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் ஒரு சில கழிப்பறைகளுக்கே கதவுகள் காணப்படுவதாகவும், இதனால் காலை வேளையில் வரிசையில் காத்து நிற்க வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கால்களை இழந்த நோயாளர்கள் 'கொமட்' வசதி இல்லாத காரணத்தால் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாகவும் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே இது விடயத்தில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தி செயற்படுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

## ஆஸ்பத்திரி வீதி புனரமைப்பு

(சண்டிலிப்பாய்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி தாரிடப்பட்டு செப்பனிப்பட்டு வருகிறது.

இதில் புகையிரத நிலையச் சந்தியிலிருந்து வைத்தியசாலை வரை இவ்வீதியிலுள்ள குழிகள் கற்களால் நிரப்பப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டு வருகின்றது.

யாழ்.மாநகர சபையினால் இவ் வீதிகள் கட்டம் கட்டமாக செப்பனிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (54)

# சின்னஞ் சிறு செய்திகள்

## மகளிர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மகளிர் தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் திருமதி யோ.நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ரவிகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சங்கத்தினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற அங்கத்தவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதுடன் மகளிரின கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (11)

## கடும் வெப்பம்; நோய்க்கு சிகிச்சை பெறுவோர் அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது நிலவும் கடும் வெப்பத்தால் வெப்ப நோய்களுக்கு இலக்காகுவோர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போதைய கடும்வரட்சி, வெப்பம் போன்றவற்றினால் இந் நோய் வேகமாகப் பரவி வருகின்றது. இதனால் தடிமல், காய்ச்சல், தலை வலி, சளி போன்ற நோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு அரச ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. (25)

## செயலமர்வுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக நடைபெற்று வரும் செயலமர்வில் தரம் 2 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 12, 13 ஆகிய திகதிகளில் புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் செயலட்டை தயாரிப்பதற்குத் தேவையான காகிதாதிகள், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி ஆகியவற்றைத் தவறாது எடுத்துவருமாறு வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (109)

☆ ☆ ☆

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் புவியியல், அரசியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியைத் தவறாது எடுத்துவருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

# வீட்டுக் கடன் காசோலைகளுக்கு பணம் பெறுவதில் வங்கிகளில் சிரமம்

(அச்சுவேலி)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அரச ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுத்திட்டக் கடனுக்கான பணம் மக்கள் வங்கிக் கிளைகளுக்கு வந்துசேரவில்லை என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக வீடமைப்பதற்காகவும், வீட்டினைத் திருத்தியமைப்பதற்காகவும் வீடமைப்புக் கடனுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு முதற் கட்டக் கொடுப்பனவிற்கான காசோலைகள் கடந்த முதலாம் திகதி உரியவர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

மேற்படி காசோலையினை வைப்பிலிட்டுப் பணம் மீளப் பெற வங்கிக்குச் சென்றபோது அக்காசோலைக்கான பணம் வந்துசேரவில்லை என வங்கி ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து காசோலையை வைப்பிலிட்டுவிட்டு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இம்முறை அரச ஊழியர்களுக்கு வீட்டுத்திட்டக் கடனாக 2 லட்சம் முதல் 5 லட்சம வரையான பணம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

# சந்தேகத்தின் பேரில் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பிரதேசத்தில் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இருவரையும் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, நீதிபதி இவ்விருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# விளையாட்டு மைதானத்தை அசிங்கப்படுத்தும் விஷமிகள்

(கொக்குவில்)

குருநகர் விளையாட்டு மைதானப் பகுதிகளை விஷமிகள் அசிங்கப்படுத்தி வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மைதானப் பகுதியை இரவு நேரங்களில் மதுப் பிரியர்கள் முற்றுகையிட்டுத் தமது உல்லாச வேளைகளைக் கழித்து வெற்றுப் போத்தல்களை அப்பகுதியில் வீசிச் செல்கின்றனர்.

வெறறுப் போத்தல்களை மைதானத்திற்குச் செல்லும் சிறுவர்கள் கற்களால் எறிந்து உடைத்து விடுவதால் மைதானத்தைப் பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு அவற்றால் காயங்கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (68)

## பதிவுகளை மேற்கொள்ளலாம்

(கிளிநொச்சி)

aat பாடநெறிக்கான பதிவுகளை கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாகவுள்ள சட்டவள நிலையத்தில் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்தி பெற்றவர்களும் மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களும், மாணவர்களும் இப்பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும், மேலதிக விபரங்களுக்கு 021 3212662, 0777705963 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.




அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் யாழ்.மாநகர பிரதி மேயர் இளங்கோவின் (றீகன்) மேற்பார்வையில் மாநகர சபை ஊழியர்கள் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். (52)

# கர்நாடக இசையை ஜனரஞ்சகமாக வாழவைப்பவர்கள் நாதஸ்வரக் கலைஞர்களே!

(யாழ்.நிருபர்)

தமிழகத்தோடு ஒப்பிடக் கூடிய அளவிற்கு தரமான இசைக் கலைஞர்கள் யாழ்ப்பாணத்தில். இருக்கிறார்கள். இதற்கு கலாநிதி.மு.பஞ்சாபிகேசன் சிறந்த எடுத்துக்காட்டு ஆவார் என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் லலீசன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் அண்மையில் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிககப்பட்ட சாவகச்சேரியூர் நாதஸ்வரமேதை மு.பஞ்சாபிகேசனின் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரி சிவன்கோவில் அருகாமையில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்றத்தின் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லலீசன் தொடர்ந்து பேசுகையில்,

கிராமிய மட்டத்திலும்சரி, நகர மட்டத்திலும் சரி கர்நாடக இசையை ஜனரஞ்சகமான முறையில் வாழவைத்துக் கொணடிருப்பவர்களுக்கு உதாரண புருஷர்களாக விளங்குபவர்கள் நாதஸ்வரக் கலைஞர்களாவர். கர்நாடக இசைஞானம் இல்லாதவர் கூட மணிக்கணக்காகத் தலையாட்டி ரசித்துக் கச்சேரியில் ஒன்றித்திருக்கும் அளவிற்கு இக்கலை ஆற்றுகை செய்யப்படுகின்றது.

நாதஸ்வரம் தமிழ்மக்களுடைய தொன்மையான வாததியக் கருவி என்றே கருதப்படுகிறது. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் இடம்பெறும் வங்கியம் என்ற காற்றுக் கருவியே பின்னாளில் நாதஸ்வரமாக உருப்பெற்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாதஸ்வர இசை கூட ஒரு வகை மொழியே. கோயில் அனுபவம் உள்ளவர்கள் தவில், நாதஸ்வர இசையை வைத்துக் கொண்டு கோவிலில் என்ன நடைபெறுகின்றதென்பதைக் கூறிவிடுவர் என்றார். (10)

# கடல் உணவு பதனிடல் கொழும்பில் பயிற்சி நெறி

(கொக்குவில்)

கொழும்பு, மட்டக்குளியில், சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தில் ஜெய்க்கா நிறுவன அனுசரணையுடன் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள கடல் உணவு பதனிடல், மீன் வளர்ப்பு ஆகிய பயிற்சி நெறிகள் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு யாழில் இருந்தும் பிரதிநிதிகள் செல்லவுள்ளனர்.

இம்மாதம் 20 ஆம் திகதி யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி உதவிப்பணிப்பாளர் மற்றும் அலுவலர், ஜெய்க்கா நிறுவன ஒருங்கிணைப்பாளர் வசந்தன் ஆகியோர் கொழும்பு வளாகத்திற்குச் செல்கின்றனர்.

அதேவேளை மாலுமிகளுக்கான 3 மாத கால பயிற்சி நெறிகள் இம்மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் - கடல் வரைபடம் வாசித்தல், தொடர்பாடல், செய்மதிக் கருவிகள் இயக்குதல் ஆகிய பயிற்சி நெறிகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சியில் செயல்முறைப்பயிற்சிகளை நடாத்த 42 - அடிநீளமான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்பட்ட கலம் ஒன்றைத் திருகோணமலையிலிருந்து குருநகர் இறங்குதுறைக்கு எடுத்துவர சமுத்திரவியல் பல்கலைக் கழக உதவியை உதவிப் பணிப்பாளர் நாடியுள்ளதாகவும் கல்லூரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (68)

# வவுனியா நகர்ப் பகுதிகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளன

(வவுனியா)

வவுனியா நகரசபை சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாக நகரசபை வட்டாரத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

வவுனியா நகரசபை மைதானத்தினைப் புனரமைத்து பார்வையாளர்கள் கூடத்தினை அமைப்பதற்காக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி 36 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியா பொது நூலகத்தில் சிறுவர் பகுதியினை அமைப்பதற்கு வெளிநாட்டிலுள்ள புலம் பெயர்ந்தவர்கள் 10 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மி,39)

# அதிரடிப்படை முகாம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா பார்க் வீதியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தும் கட்டடத் தொகுதியில் கடந்த 10 வருடங்களாக இயங்கி வந்த இலங்கை இராணுவ விசேட அதிரடிப்படை முகாம் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிரடிப்படை முகாம் மடுகந்த என்ற இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (மி,39)

# மீன்பிடி உபகரணங்களுக்குத் தடை வடமராட்சி மீனவர்கள் கவலை

(வடமராட்சி))

வடமராட்சி கடற்பகுதியில் தங்கூசி வலை, டிஸ்கோ வலை மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டள்ளதால்.

சிறு கடற்தொழிலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாதிருப்பதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இக் கடற்பரப்பில் குறித்த மீன்பிடி வலைகள் மூலம் தொழிலை மேற்கொண்டு வந்த போதிலும் தற்போது அவை தடைசெய்யப பட்டுள்ளதால், தமது தொழில் நடவடிக்கைகள் பெரும் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு மாற்றீடாக ஒரு தொழில் வளத்தை ஏற்படுத்தித் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(100)

# பிறவுண் வீதியில் திருட்டுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பிறவுண் வீதியில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் பகல்வேளை 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அம்மனுக்குச் சாத்தப்பட்டிருந்த நகைகள், முடி உட்பட்ட பெறுமதியான பொருட்களை திருடிச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

## ஆதினியின் இன்றைய பலன்

(06.03.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 23
இராகுகாலம் 7.25– 12.25,
சுபநேரம் 12.25 –1.55,
துதியை காலை 6.4,
உத்தரட்டாதி காலை 7.51, சித்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– மனக்குழப்பம், நண்பர் விரோதம், பொருள் இழப்பு.

ரிஷபம்:– அகால போசனம், வீண் முயற்சி, காரியத்தடை.

மிதுனம் :– தேகநலன் விருத்தி, மனமகிழ்வு, காரிய சித்தி.

கடகம்:– ஆலய வழிபாடு, உதவிகள் செய்தல், சுறுசுறுப்பு.

சிம்மம்:– கௌரவம் உயர்வு, காரிய சித்தி, பெரியோர் பாராட்டு.

கன்னி :– கற்பனை மிகுதி, வேண்டாத நிகழ்வு, குடும்பச் சச்சரவு.

துலாம் :– போட்டியில் வெற்றி, நண்பர் சேர்க்கை, கொண்டாட்ட விருப்பு.

விருச்சிகம்:– குடும்பத்தில் குதூகலம், மேலாளர் உதவி, உற்சாக மிகுதி.

தனுசு:– பொருள் வரவு, பகைவர் உறவு, கலைகளில் ஈடுபாடு.

மகரம்:– காரிய சித்தி, பண வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி.

கும்பம் :– கடும் முயற்சி, கற்பனை மிகுதி, காரியத்தடை.

மீனம்:– தொழிலால் லாபம், வாகன சுகம், மேலாளர் உதவி.

# கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு 2 மாடிக் கட்டடம்

(கொக்குவில்)

கடலோட்டு மற்றும் கடற்றொழில் இயந்திரவியல் கல்லூரிக்கு யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்கு வீதியிலுள்ள காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட இருக்கும் இரண்டு மாடிக்கட்டடத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

யாழ்.மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கட்டட வேலைகளை ஆரம்ப்பதற்கான அனுமதியைக்கோரி அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், சிவில் நிர்வாகப்பொறுப்பதிகாரி மற்றும் குருநகரை யாழ்.மாநகரசபையில் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஆகியோருக்கும் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஜெய்க்கா நிறுவனத்தினர் கட்டடத் தொகுதியை அமைக்க, முன்னர் தீர்மானித்துள்ளதை விடவும் மேலும் உதவிகளை வழங்க முன்வந்துள்ள அதேவேளை, வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க துரிதப்படுத்துவதாகவும் உதவிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (68)


# விஞ்ஞான சங்கத்தின் விசேட கருத்தரங்கு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கருத்தரங்கும் கலந்துரையாடலும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக பொருளியற்துறை மணடபத்தில் நடைபெற்றது.

பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் 'யாழ்.மாவட்ட கிராமிய அபிவிருத்தி தொடர்பான வாயப்புக்களும் சவால்களும் ஒரு நோக்கு என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஓய்வு பெற்ற பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.சிவலிங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப் படும் அபிவிருத்திப் பணிகள் மக்களைச் சென்றடைகின்றனவா? கிராமப்புறங்களில் எவ்வாறான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும். மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் என்ன என்பது தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (10)




ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் புனித வின்சன் டி போல் சபை உருவாக்கப்பட்டு 25 ஆவது ஆண்டு நிறைவுவிழா ஆலய முன்றலில் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட புனித வின்சன்டிபோல் மத்தியசபையின் ஆன்ம ஆலோசகர் அருட்தந்தை சகாயம் மற்றும் பருத்தித்துறை கோட்டக் குருமுதல்வர் அருட்தந்தை மௌலிஸ், மத்தியசபைத் தலைவர் ம.அலெக்ஸ் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# ஐ.பி.எல்.இல் ஆடமுடியாது

(சென்னை)

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரரான கெவின் பீட்டர்சன், கடந்த ஜனவரி மாதம் நடந்த ஐ.பி.எல். ஏலத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பில் ரூ. 3 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்டார். தற்போது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் ஆடிவரும் பீட்டர்சன் குடல் இறக்க நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் அவர் ஐ.பி.எல். போட்டியில் தன்னால் ஆட முடியாது என்று சென்னையில் நேற்று முன்தினம் தெரிவித்தார். அதே சமயம் அணி டாக்டரிடன் ஆலோசனைப்படி உலகக் கிண்ணப் போட்டித் தொடர் முழுவதும் தன்னால் விளையாட முடியும் என்றும் குறிப்பிட்டார்.



டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. உலகக் கிண்ணத் தொடர் முடிந்ததும் பீட்டர்சன் சத்திர சிகிச்சை செய்ய முடிவு செய்துள்ளார்.

# உணர்வுகளைக் கட்டுப்படுத்துங்கள்



(பெங்களூர்)

கிரிக்கெட் ரசிகர்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

மேற்கிந்தியத்தீவு அணியிடம் பங்களாதேஷ் அணி படுதோல்வியடைந்த பின்னர் பங்களாதேஷ் ரசிகர்களால் மேற்கிந்தியத்தீவு அணி வீரர்களின் பஸ் மற்றும் பங்களாதேஷ் அணித் தலைவரின் வீடு ஆகியன கல்வீச்சுக்கு உள்ளாகியமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும போது டோனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இது துரதிர்ஷ்டவசமானது. ஆனால், இப்படித்தான் ரசிகர்கள் பிரதிபலிக்கிறார்கள். அவர்கள் கிரிக்கெட் போட்டியில் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

நாங்கள் போட்டியில் வென்ற பின்னர் நான் ரசிகர்களிடம் சென்று 2007ஆம் ஆண்டு எனது வீட்டைத் தாக்கினீர்தானே என்று கூறி அவர்களைத் தாக்குவதில்லை. வெற்றிபெறும் போது அனைவரும் உங்களுடன் இருப்பார்கள். வீரர்கள் சிறப்பாக இல்லாதபோது அவர்களை ரசிகர்கள் ஆதரிக்க வேண்டும். அவர்கள்தான் உண்மையான ரசிகர்கள்.

எனவே, ரசிகர்கள் தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் நல்லதாக அமையும் என்றார்.

# பங்களாதேஷ் ஆட்டங்கள் மாறாது

(சென்னை)

பங்களாதேஷில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் மாற்றம் செய்யப்படமாட்டாது என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமைச் செயல அதிகாரி ஹாரூன் லார்கட் சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்கிந்தியத்தீவு அணி வீரர்கள் சென்ற பஸ் மீது, பங்களாதேஷ் ரசிகர்கள் கல்வீசித் தாக்கிய சம்பவம் வருத்தம் அளிக்கிறது. இதுபோன்ற சம்பவத்தைப் பார்க்க விரும்பவில்லை. இது ஒரு சிறிய சம்பவம் என்றே எனக்குச் சொல்லப்பட்டது. வெறுப்படைந்த சில ரசிகர்கள் சிறிய கற்களை பஸ் மீது வீசியதாகத் தெரிகிறது. அந்த நேரத்தில் அங்கு இருந்த பொலிஸார் சிலரைக் கைது செய்துள்ளனர்.

உலகக் கிண்ணப் போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளது. பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் பணியை சிறப்பாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இந்தச் சம்பவத்தினால் பங்களாதேஷில் நடைபெறவுள்ள போட்டிகள் மாற்றம் செய்யப்படமாட்டாது. திட்டமிட்டபடி போட்டிகள் அங்கு நடைபெறும்.

நடுவரின் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்து மூன்றாவது நடுவரின் உதவியுடன் முடிவை எடுக்கும் புதிய முறை (யு.டி.ஆர்.எஸ்) முன்னோடித் திட்டமாகும். நடுவர்கள் சரியான முடிவை மேற்கொள்ள தொழில்நுட்பம் உதவும். இந்த முறை வளர்ச்சி அடைந்து வரும் நிலையில் உள்ளது. இது போன்ற முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அனைவரும் விதிகளைக் கற்று வைத்திருப்பது அவசியம்.

ஐ.சி.சி. மேலாளர் ரிச்சர்ட்சன், டோனியின் கருத்துக்குத் தெரிவித்த பதில் தொலைக் காட்சிகளில் திரித்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. ரிச்சர்ட்சன், டோனியை அந்த மாதிரி விமர்சிக்கவில்லை. இந்தச் சம்பவத்தால் இந்திய கிரிக்கெட் சபையுடனான ஐ.சி.சி.யின் உறவில் பிரச்சினை இல்லை. நடுவரின் முடிவை எல்லா வீரர்களும் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள



வேண்டும். நடுவரின் முடிவில் தவறு ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் 10 அணிகள் மட்டுமே தகுதி பெற வேண்டும் என்று எடுத்த முடிவு சரியானதாகும். ஐ.சி.சி.யின் அடுத்த கூட்டத்தில் உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கு அணிகள் தகுதி பெறுவதற்கான வழிமுறைகள் கடுமையாக்கப்படும். 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் சிறிய அணிகள் பங்கேற்க அதிக வாய்ப்புகள் அளிக்கப்படும் என்றார்.


# முதல் வெற்றியைப் பதிவாக்குவோம்

இன்றைய போட்டியில் வென்று முதல் வெற்றியைப் பதிவாக்குவோம் என கென்யா அணித் தலைவர் தெரிவித்தார்.

கனடா அணியுடனான இன்றைய போட்டி குறித்துக் கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: நாங்கள் இதுவரை ஆடிய மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்து விட்டோம். எனினும் இன்றைய போட்டி எங்களுக்கு முதல் வெற்றியாகப் பதிவாகும் என்றே எதிர்பார்க்கின்றேன்.

கடந்த உலகக் கிண்ணத் தொடர்களில் வலுவான அணியாக இருந்து எதிரணிகளுக்கு அதிர்ச்சி அளித்திருக்கின்றோம். இந்த உலகக் கிண்ணத் தொடரில் நாங்கள் வீரர்களைக் கொண்ட அணியாகவே நாங்கள் வந்திருந்தோம். இருப்பினும் துரதிர்ஸ்டவசமாக ஆரம்பப் போட்டிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டு விட்டது என்றார்.



# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011


எதிர்பாராத ஏமாற்றம் இலங்கை அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் போட்டி. இவ்விரு அணிகளுக்கும் இடையில் ஒரு கணக்குத் தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது. அதுதான் 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டி. 1999இல் இருந்து தொடர்ந்து மூன்று முறை கிண்ணத்தை வென்ற நாடு அவுஸ்ரேலியா. அதிலும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் சந்தித்துக் கொண்ட அணிகள் இலங்கையும் அவுஸ்ரேலியாவும். இந்நிலையில் இலங்கை, அவுஸ்திரேலியாவிற்கு ஒரு பாடம் புகட்ட எண்ணியதில் வியப்பில்லை. இனனொரு புறம் அவுஸ்ரேலியா பழைய வீரயம்மிக்க அணி அல்ல. 1992இல் இருந்து இன்று வரையில் இலங்கை அவுஸ்ரேலியா சந்தித்த பத்தொன்பது சந்தர்ப்பங்களில் ஆறு முறையே அவுஸ்ரேலியா வென்றுள்ளது. மேலும் 2010 அவுஸ்ரேலியாவை 2-1 என்று இலங்கை தோற்கடித்ததும் கடுப்புக்கு ஒரு காரணம்.

முன்பெல்லாம் இதுவே வெல்லும் என்று சுட்டிக்காட்டப்பட்ட அவுஸ்ரேலியா இப்போது அப்படி இல்லை.

இந்நிலையில்தான் நீயா, நானா என்று பார்க்க நேற்று முன்தினம் களம் கண்டனர் இருவரும். ஆனால், ஆட்டத்துக்கு அப்பால் நிகழ்ந்த சம்பவங்கள் தான் கூடுதலாகக் கவனத்தைக் கவர்ந்தன.

இரண்டாவது ஓவரை ஷோன் டெயிட் வீச, தில்சான் அதில் அழகாக ஒரு பவுண்டரியை அடித்தார். ஆனால் இதனைப் பந்து வீச்சாளரால் பொறுத்துக் கொள்ளவே இயலவில்லை. எனவே டில்சான் நோக்கி ஏதேதோ வார்த்தைகளைக் கொட்டித் திட்டினார். பதிலுக்கு டில்சானும் அடுத்த பந்தை டெய்ட் வீசவர உச்சக்கட்டத்தில் பின்வாங்கவே அவுஸ்ரேலிய அணிக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. நடுவரிடம் ஏதேதோ சொல்ல, இரு அணிகளும் ஏதோ தனிப்பட்ட விரோதம் கொண்ட அணிகளோ என்ற சந்தேகம் வந்துவிட்டது பார்வையாளர்களுக்கு.

ஆனால், ஒன்றைக் கூற முடியும். அவுஸ்ரேலிய அணியின் செயற்பாடுகள் அநேகமான சந்தர்ப்பங்களில் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நாகரீகமாக இருப்பதில்லை என்பதுதான் அது. கிரிக்கெட்டில் ஏதோ வரமளிக்கப்பட்டவர்கள் இவர்கள் என்பது போலவும் மற்றையோர் அதிலும் ஆசிய அணிகள் ஏதோ பிறவிக்குறைபாடுகள் உள்ளவர்கள் போலவும் நடந்து கொள்வது அவர்களது வழக்கம். இது இன்று நேற்றல்ல. நீண்ட காலமாகத் தொடருவதுதான்.



இதற்கிடையில் முரளிதரனின் பந்து வீச்சுத் தொடர்பாக ஐ.சி.சி. நடுவர்கள் பலர் திருப்தியாக இல்லை என்றும், ஆனால் அதைப் பற்றிப் பேச விரும்புவதில்லை என்றும் முன்பு முரளியுடன் முரண்பட்ட நடுவர் டரல் ஹயர் கருத்தொன்றை முன்வைத்துள்ளார். இது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதைப் போலத்தான் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கை அணியின் மைதானப் பலம் அறிந்து அஞ்சும் சிலர் மைதானத்துக்கு அப்பால் இலங்கையின் மனோ திடத்தைப் பாதிக்க முயற்சி செய்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், சங்கக்கார எந்த அழுத்தத்துக்கும் உட்படாமல் ஆட்டமிழக்காமல் எடுத்த 73 ஓட்டங்களானது, எந்த அழுத்தமும் இலங்கை அணியைப் பாதிக்காது, அவர்கள் நிமிர்ந்து நிற்பார்கள் என்ற உறுதியை வெளிப்படுத்துகிறது.

ஜோசப் கிருஷ்ணா

**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011

# ஐ.சி.சி. நிராகரிப்பு

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் எம். முரளிதரன் தொடர்பாக அவுஸ்ரேலிய நடுவர் டெரல் ஹயார் தெரிவித்த குற்றச்சாட்டை சர்வதேச கிரிக்கெட் சபை நிராகரித்துள்ளது.

முரளிதரன் இப்போதும் பந்தை முறையற்ற விதமாகவே வீசி எறிவதாகவும், ஆனால், ஓய்வு பெறவுள்ள நிலையில் அவர் பந்தை எறிகிறார் எனக் கூறுவதற்கு களத்தில் உள்ள நடுவர்கள் தயங்குவதாகவும் டெரல் ஹயார் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமைச் செயல அதிகாரி ஹாரூன் லார்கட் ஊடகங்களுக்குத் கருத்துத் தெரிவிக்கையில், எமது சிறப்பு நடுவர் குழாமிலும் நாம் ஏற்படுத்தியுள்ள விதிகளிலும் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளோம். அவற்றை அமுல்படுத்துவது நடுவர்களைச் சார்ந்ததாகும். டெரல் இப்போது எமது நடுவர் குழாமில் இல்லை. அவரின் பாத்திரம் அந்தளவுதான் என்றார்.

International Cricket Council

## தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1) மார்ச் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டியிள் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?

பெயர்: ..................

முகவரி : ..................

போ.இல : ..................

விடைகள் : 01) ..................

02) ..................

**போட்டி இல: 18**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 08 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# தினமுரசு இந்தியா எதிர் அயர்லாந்து SCORE CARD

மைதானம் : பெங்களூர். திகதி : 06-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி இந்தியா : முதலில் களத்தடுப்பு.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எஸ். போட்டபீல்ட் | c ஹர்பஜன் b யுவராஜ்சிங் | 75 |
| 02) ஆர். ஸ்ரேலிங் | b சகீர்கான் | 00 |
| 03) சி. ஜொய்ஸ் | c டோனி b சகீர்கான் | 04 |
| 04) என்.ஜே. ஒபிரயன் | run out (ஹோல்/டோனி) | 46 |
| 05) ஆர். வைற் | c டோனி b யுவராஜ்சிங் | 05 |
| 06) கே.ஜே. ஒபிரயன் | c&b யுவராஜ்சிங் | 09 |
| 07) ஏ.ஆர். ஜூசேச் | lbw b யுவராஜ்சிங் | 24 |
| 08) ஜே.எவ். மூனி | lbw b யுவராஜ்சிங் | 05 |
| 09) ஜோன்ஸ்ரன் | lbw b முானப் பட்டேல் | 17 |
| 10) எச். டொல்ரல் | c டோனி b சகீர்கான் | 03 |
| 11) பி. ரன்கின் | not out | 01 |
| உதிரிகள் | (lb 4, w 8, nb6 ) | 18 |
| மொத்தம் | (all out : 47.5. ஓவர்கள்) | 207 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) வி. சேவாக் | c&b ஜோன்ஸ்ரன் | 05 |
| 02) சச்சின் டெண்டுல்கர் | lbw b டொல்ரல் | 38 |
| 03) கௌதம் கம்பீர் | c ஜூசேச் b ஜோன்ஸ்ரன் | 10 |
| 04) விராட் ஹோலி | run out (டொல்ர்/ஒபிரயன்) | 34 |
| 05) யுவராஜ்சிங் | not out | 50 |
| 06) எம்.எஸ். டோனி | lbw b டொல்ரல் | 34 |
| 07) யூசுப் பதான் | not out | 30 |
| 08) ஹர்பஜன்சிங் | | |
| 09) பி. சாவ்லா | | |
| 10) சகீர்கான் | | |
| 11) முனாப் பட்டேல் | | |
| உதிரிகள் | (lb 4, w 5) | 09 |
| மொத்தம் | (5 W : 46 ஓவர்கள்) | 210 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சகீர்கான் | 09 | 30 | 03 |
| முனாப் பட்டேல் | 4.5 | 25 | 01 |
| யூசுப் பதான் | 07 | 32 | 00 |
| ஹர்பஜன்சிங் | 09 | 29 | 00 |
| யுவராஜ்சிங் | 10 | 31 | 05 |


| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பி. ரன்கில் | 10 | 34 | 00 |
| ஜோன்ஸ்ரன் | 05 | 16 | 02 |
| எச். டொல்ரல் | 10 | 49 | 02 |
| எவ். மூனி | 02 | 18 | 00 |
| ஸ்ரேலிங் | 10 | 45 | 00 |

**05 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி. ஆட்டநாயகன் : யுவராஜ்சிங்**

## இந்தியா வெற்றி

(பெங்களூர்)

அயர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 22 ஆவது போட்டியில் மேற்படி இரு அணிகளும் மோதின. பொங்களூர் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இப் போட்டி நடைபெற்றது. முதலில் ஆடிய அயர்லாந்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக யுவராஜ்சிங் தெரிவானார்.



## இன்றைய ஆட்டம்

கென்யா எதிர் கனடா

மைதானம் : புதுடில்லி

பகலிரவு ஆட்டம்

ICC Cricket World Cup 2011

அயர்லாந்துக்கு எதிரான தோல்விக்கு அடுத்து, இந்த போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருந்தது. இந்நிலையில் அனைத்து வீரர்களும் இணைந்து, போராட்ட குணத்தை வெளிப்படுத்தினர். முதல் பாதிக்கு பின், ஆடுகளம் மிகவும் மோசமடைந்து விட்டது. இதனால் பந்து வீச்சு நன்றாக எடுபட்டது. இதை ஸ்வான், புரோட், அண்டர்சன் சரியாக பயன்படுத்தினர் என தென்னாபிரிக்காவுடனான போட்டியில் வெற்றி பெற்ற பின்னர், இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோர் தெரிவித்தார்.




## இங்கிலாந்து வெற்றி

(சென்னை)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான போட்டியில் இங்கிலாந்து அணி ஆறு ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பத்தாவது உலகக் கிண்ணத் தொடரின் 21ஆவது போட்டியாக இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

சென்னை மைதானத்தில் நேற்று பகல் ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, 45.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணி 47.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ருவட் புரோட் தெரிவானார்.



# தினமுரசு இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா SCORE CARD

மைதானம் : சென்னை. திகதி : 06-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி இங்கிலாந்து : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) அன்ட்ரூ ஸ்ரோஸ் | c வில்லியர்ஸ் b பீட்டர்சன் | 00 |
| 02) கெவின் பீட்டர்சன் | c கலிஸ் b பீட்டர்சன் | 02 |
| 03) ஜொனதன் ட்ரொட் | c&b இம்ரான் தாஷிர் | 52 |
| 04) இயன் பெல் | c&b பீட்டர்சன் | 05 |
| 05) ரவி பொபார | lbw b மோர்க்கல் | 60 |
| 06) மட் பிறயர் | c வான்வைக் b மோர்க்கல் | 10 |
| 07) மைக்கல் யார்டி | c பீட்டர்சன் b இம்ரான் தாஷிர | 03 |
| 08) ரிம் பிரெஸ்னன் | lbw b டேல் ஸ்ரெயின் | 01 |
| 09) கிரேம் ஸ்வான் | c டுமினி b இம்ரான் தாஷிர் | 16 |
| 10) ஸ்ருவட் புரோட் | lbw b இம்ரான் தாஷிர் | 00 |
| 11) ஜேம்ஸ் அண்டர்சன் | not out | 02 |
| உதிரிகள் | (b1, lb 7, w 12 ) | 20 |
| மொத்தம் | (all out : 45.4 ஓவர்கள்) | 171 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஹஷீம் அம்லா | b புரோட் | 42 |
| 02) கிரேம் ஸ்மித் | c பிறயர் b ஸ்வான் | 22 |
| 03) ஜக் கலிஸ் | c பிறயர் b புரோட் | 15 |
| 04) டி வில்லியர்ஸ் | b அண்டர்சன் | 25 |
| 05) டு. பிளசிஸ் | run out (பெல்/பிறியர்) | 17 |
| 06) டுமினி | b அண்டர்சன் | 00 |
| 07) மொனே வான் வைக் | b பிரெஸ்னன் | 13 |
| 08) றொபின் பீட்டர்சன் | c பிறயர் b யார்டி | 03 |
| 09) டேல் ஸ்ரெயின் | lbw b புரோட் | 20 |
| 10) மோர்னே மோர்க்கல் | c பிறயர் b புரோட் | 01 |
| 11) இம்ரான் தாஷிர் | not out | 01 |
| உதிரிகள் | (lb 2, w 4 ) | 06 |
| மொத்தம் | (all out : 47.4 ஓவர்கள்) | 165 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| றொபின் பீட்டர்சன் | 08 | 22 | 03 |
| டேல் ஸ்ரெயின் | 09 | 37 | 01 |
| மோர்னே மோர்க்கல் | 07 | 16 | 02 |
| ஜக் கலிஸ் | 04 | 14 | 00 |
| இம்ரான் தாஷிர் | 8.4 | 38 | 04 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| மைக்கல் யார்டி | 09 | 46 | 01 |
| ஜேம்ஸ அண்டர்சன் | 06 | 16 | 02 |
| ரிம் பிரெஸ்னன் | 08 | 27 | 01 |
| கிரேம் ஸ்வான் | 10 | 29 | 01 |
| ஸ்ருவட் புரோட் | 6.4 | 15 | 04 |

**06 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி. ஆட்டநாயகன் : புரோட்**

அனுசரணையாளர்:

ICC Cricket World Cup 2011

EUT தளபாட விற்பனை நிலையம்

அலுவலக மேசைகள், கணினி மேசைகள், கதிரைகள், சுழல்கதிரைகள், பலவகைப்பட்ட அலுவலக அலுமாரிகள், T.V. Stand வகைகள், சோபா செற்றிகள், சாப்பாட்டுமேசைகள், றெசின் டேபிள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

காட்சியறை
EUT தளபாட விற்பனை நிலையம்
இல: 270, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 567 7478

Head Office
Chunnakam East
Chunnakam

c/601

# தி.மு.க. விலகியதை அடுத்து தனித்துப் போட்டியிட காங்கிரஸ் முடிவு

(சென்னை)

காங்கிரஸ் உறவை தி.மு.க. துண்டித்துள்ளதைத் தொடர்ந்து தமிழக அரசியலில் அந்தக் கட்சிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி இருக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தி.மு.க.வைப் பொறுத்தவரை, அதன் கூட்டணியில் பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக், கொங்கு நாடு முன்னேற்றக் கழகம், மூவேந்தர் முன்னேற்றக்கழகம் ஆகிய கட்சிகள் இடம் பெற்றுள்ளன. பல வேறு சமூக நல அமைப்புகள், சங்கங்கள் தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

காங்கிரசைப் பொறுத்தவரை தற்போது எந்த ஒரு கட்சியும் அதனுடன் இல்லை. எனவே அ.திமு.க. பக்கம் காங்கிரஸ் அணி மாறக்கூடும் என்று தகவல்கள் வெளியானது. காங்கிரசாரில் ஒரு சாரார் அ.தி.மு.க.வுடன் கை கோர்க்கலாம் என்று கூறினார்கள். ஆனால் அ.தி.மு.க.- காங்கிரஸ் இரண்டும் உடனடியாக பரஸ்பரம் நட்பு பாராட்டும் வகையில் சூழ்நிலை இல்லை.

காங்கிரசைச் சேர்த்துக் கொளள அ.திமு.க. தலைமை ஆர்வம் காட்டவில்லை என்று தெரிய வந்துள்ளது. காங்கிரஸ் தனித்து நின்றால் வாக்குகள் பிரிந்து தங்களுக்குச் சாதகமான வாய்ப்பு ஏற்படும் என்று அ.தி.மு.க. கருதுகிறது. தி.மு.க., அ.தி.மு.க. இரு பக்கமும் சேராமல் காங்கிரஸ் 3 ஆவது அணி அமைக்கலாம் என்று கூறப்பட்டது. ஆனால் 3 ஆவது அணியை உருவாக்க காங்கிரசுக்கு கை கொடுக்க வலுவான வேறு எந்தக் கட்சிகளும் இல்லை.


எல்லாக் கட்சிகளும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. அணியில் போய்ச் சேர்ந்து விட்டன. எனவே தமிழக காங்கிரசின் நிலை தற்போதைக்கு குழப்பமான நிலையில் தான் உள்ளது. சில மாதங்களுக்கு முன்புவரை தே.மு.தி.க. வுடன் காங்கிரஸ் சேரும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். தற்போது அதுவும் இல்லை என்றாகிவிட்டது. தனித்து விடப்பட்டுள்ள காங்கிரஸ் தொண்டர்கள மேலிடத்தின் தொடர் மௌனத்தால், அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய தெளிவு இல்லாமல் உள்ளனர்.

இந்த நிலையில் கடைசியில் காங்கிரஸ் கட்சி தமிழக சட்டசபைத் தேர்தலைத் தனித்து நின்றே சந்திக்கும் என்று தெரிய வந்துள்ளது. தொகுதிப் பங்கீட்டை காரணமாகக் கூறினாலும் ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் இருந்து கட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவே காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் தனித்துப் போட்டியிடும் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

தனித்துப் போட்டியிட்டால் வெற்றி பெற இயலாது என்று தமிழக காங்கிரசார் அதிர்ச்சியில் உள்ளனர். ஆனால் தனித்துப் போட்டியிட்டால்தான் 234 தொகுதிகளிலும் கட்சியின் உள் கட்டமைப்பை உறுதிப்படுத்த முடியும் என்று காங்கிரஸ் மேலிட தலைவர்கள் நினைக்கிறார்கள். தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு 12 முதல் 15 சதவீதம் வாக்கு இருபபதாக சமீபத்தில் எடுத்த சர்வே மூலம் காங்கிரஸ் மேலிடம் உறுதிப்படுத்திக் கொண்டுளளது. எனவே 234 தொகுதிகளிலும் வெற்றி- தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக காங்கிரஸ் இருக்கும்.

அதைப் பரீட்சித்துப் பார்த்து விடலாம் என்று ராகுல்காந்தி கூறி வருகிறாராம். எனவே தமிழக தேர்தல் களத்தை தன்னந் தனியாக நின்று எதிர்கொள்ள காங்கிரஸ் மேலிடத் தலைவரகள் தீர்மானித்துள்ளனர். ஆனால் தி.மு.க.விடம் பதவி சுகம் அனுபவித்த காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் தங்கள் தலைவிதி என்ன ஆகுமோ என்ற பீதியில் உள்ளனர்.

# காங்கிரஸின் முக்கிய பிரமுகர்கள் சென்னைக்கு விரைகின்றனர்



தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிட காங்கிரசுக்கும் தி.மு.க.வுக்கும் தொகுதி பங்கீடு பிரச்சினையால் ஏற்பட்ட பின்னடைவைத் தொடரந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இருந்து விலகுவதாக தி.மு.க. அறிவித்தது.

இதுகுறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி, தற்போதை சூழலில் கருத்து எதுவும் கூற விரும்பவில்லை. பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும்போது இந்தச் சம்பவம் நடந்துவிட்டது. தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். தொகுதி எண்ணிக்கையில் பிரச்சினை இல்லை. பேசசுவார்த்தைக்குப் பின் காங்கிரசுக்குத் தேவையான தொகுதிகளைக் கேட்டுப் பெறுவோம் என்றார்.

தி.மு.க முடிவு குறித்து குலாம் நபி ஆசாத் கூறுகையில், தி.மு.கவுடன் உறவு முறியவில்லை. ஏனென்றால் பேச்சுவார்த்தை தொடர்கிறது. தொகுதிகளை இனம் காண அவகாசம் தேவை. பின்னர் நடைபெறும் பேச்சுவார்த்தையில் தேவையான தொகுதிகளைக் கேட்டுப் பெறுவோம் என்றார்.





தி.மு.க தனது முடிவை அறிவிக்கும் முன்பு தி.மு., காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்றும், இரு கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தி தொகுதி பங்கீடு குறித்து தீர்வு காணும் என்றும் பிரணாப் முகர்ஜி கூறியிருந்தார். தி.மு.க தன்து முடிவை அறிவித்த பின்னர், கூட்டணியைத் தொடருவதற்காக பிரணாப் முகர்ஜி மற்றும் குலாம் நபி ஆசாத் சென்னை வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என அரசியல் வட்டாரத்தில் செய்திகள் வெளியாகி உள்ளன. ஆனால் தி.மு.க தனது முடிவை அறிவித்த பிறகு, தன்னுடைய தேர்தல் பணிகளை கவனித்து வருகிறது. பாமகவுடன் தொகுதிப் பங்கீடு குறித்து ஞாயிற்றுக்கிழமை பேச்சுவார்த்தையை நடத்துகிறது.




# மக்களின் தீர்ப்பை அரசியல் வன்முறையால் அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது

## ஐ.தே.க.பிரதித்தலைவர் கருஜயசூரிய



(கொழும்பு)

நாட்டு மக்களின் அதிருப்திக்குள்ளாகிவரும் அரசாங்கம் இன்று மக்களின் தீர்ப்பை துப்பாக்கிக் குண்டுகளாலும் அரசியல் வன்முறையாலும் அடக்க முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கண்டனம் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவினால் வலஸ்முல்லையில் ஏற்பாடு செய்திருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் வன்முறைத் தாக்குதலுக்குப்படுத்தப்பட்டதைக் கண்டித்து விடுத்திருக்கும் அறிக்கையிலேயே கருஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட நாள் முதலே ஆளும் தரப்பினரின் அடாவடித்தனங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. முதலில் பேருவளையில் எமது வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 8 வேட்பாளரது கையை வெட்டுமளவுக்கு அவர்களது அடாவடித்தனம் மேலோங்கிக் காணப்பட்டது. பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆளும் தரப்பினர் எதிரணியின் மீது மட்டுமல்ல அவர்களுக்குள்ளேயும் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். ஆளும்தரப்பு பிரசாரக் கூட்டத்தின் போது சக வேட்பாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் இருவர் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரசியல் கட்சி, நிறத்தை வைத்து மக்கள் மத்தியில் பிளவுகள் ஏற்படாமல் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

நாம் மீண்டும், மீண்டும் வலியுறுத்துவது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி வேட்பாளர்கள் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பத்தை இந்தத் தேர்தலில் பெற்றுக்கொடுக்க வேண்டும். மக்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாக்களிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மக்கள் ஆத்திரமூட்டப்படுவார்களானால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமானவையாக ஆகிவிடலாம். ஜனநாயகம் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படலாம் எனவும் கரு ஜயசூரிய தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# நவீன உலகுடன் பொருந்தும் வகையில் கல்விமுறை மாற்றமடைய வேண்டும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

மாற்றமடைந்து வரும் உலகுடன் பொருந்தக்கூடிய கல்வி முறைமையின் அவசியம் குறித்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

பத்தரமுல்ல கொஸ்வத்தை எம்.டி.எச் ஜயவர்த்தன வித்தியாலயத்திற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாதிரி கணிதப் பிரிவின் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

மாற்றமடைகின்ற உலகில் இன்றைய சம்பிரதாய முறையிலான கல்வி முறைமையின் மூலம் உலகிற்கும்நாட்டிற்கும் பொருந்தக்கூடிய ஒரு பிள்ளையை உருவாக்குவது சிரமமானதாகும் என்று குறிப்பிட்டார்.

தற்போதுள்ள முறையின் கீழ் இலவசக்கல்வியின் மூலம் மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியாதுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

உலகத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தகவல் தொழிநுட்பம், ஆங்கில மொழியறிவு, கணிதம், கலை மற்றும் விளையாட்டுப் போன்ற துறைகளில் அதிக நேரத்தைச் செலவிடாவிட்டால பின்னடைவைக் கண்ட நாடொன்றே உருவாகும் நிலையேற்படும் என்று கல்வி அமைச்சர் மேலும் கூறினார்.

# ஐ.நா மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வராது

## என்கிறது கொழும்பு ஆங்கில வாரஏடு

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 16ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதுவும் கொண்டு வரப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று கொழும்பு ஆங்கில வாரஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை என்று உறுதியாகியுள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கூட்டத் தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும்.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் குறித்த தீர்மானமே இந்தக் கூட்டத்தொடரில் விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த முயற்சிகளைத் தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவொன்றை அனுப்பி வைத்திருந்தது.

ஜெனிவாவில் இந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னரே அமைச்சர் மகிந்த சமரசிங்க, முக்கியமான 50 இற்கும் அதிகமான நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து மனித உரிமை மீறல்கள் குறித்த இலங்கையின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கியிருந்தார்.

அத்துடன் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு எதிரான அணியுடன் இணைந்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது குறித்து ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையைச் சந்தித்து அவர் விளக்கமளித்திருந்தார்.

இந்தநிலையிலேயே இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதுவும் ஜெனிவா கூட்டத் தொடரில் கொண்டு வரப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறியுள்ளார் அமைச்சர் மகிந்த சமரசிங்க.

அத்துடன் இலங்கைக்கு எதிரான தீர்மானம் பற்றிய எந்தக் குறிப்பும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நிகழ்ச்சி நிரலிலும் இடம்பெறவில்லை என்று அறியப்படுகிறது.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத எந்தவொரு தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்படமாட்டாது என்றும், இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேராவும் கூறியுள்ளார்.

# ஏழாயிரம் விவசாய பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி தலைமையில் விவசாயமாநாடு



(கொழும்பு)


நாட்டின் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 7000 விவசாயப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட விவசாய மாநாடு கடந்த வியாழக்கிழமை காலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

குடும்ப போஷாக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்தி' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு ஜனாதிபதி விவசாய உபகரணங்களை வழங்கினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, விவசாய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

# உயர் தொழில்நுட்ப கற்கைநெறி நிறுவனங்களை யாழ்ப்பாணம் உட்பட 3 மாவட்டங்களில் நிறுவஏற்பாடு

(கொழும்பு)



அவுஸ்ரேலிய மற்றும் நெதர்லாந்து நாடுகளின் உதவியுடன் யாழ்ப்பாணம்,கண்டி,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உயர் தொழில்நுட்ப கற்கைநெறி நிறுவனங்கள் அமைக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

மட்டக்குளி மற்றும் காலி மாவட்டங்களிலுள்ள உயர் தொழில்நுட்ப கற்கைநெறி நிறுவனங்களில் கல்விபயிலும் மாணவர்களின் பாவனைக்காக அவுஸ்ரேலிய மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளின் உதவியுடன் சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்குளியிலுள்ள உயர் தொழில்நுட்ப கற்கை நெறி மூலம் நாட்டிற்குத் தேவைப்படும் நான்காயிரம் உதவிப் பொறியியலாளர்களை உருவாக்க உள்வாங்கும் மாணவர்களை இருமடங்காக அதிகரிக்க வேண்டும். வருடாந்தம் ஆயிரம் பொறியியலாளர்கள் தமது படிப்பை முடித்து வெளியே வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலை நேரத்தை மாற்றவுள்ள முடிவுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

பாடசாலை நேரத்தை மாற்ற கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன எடுத்துள்ள நடவடிக்கை பொருத்தமானது அல்ல என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலை நேரம் மாற்றப்படுவது கல்வி மனநிலைக்கு மாறானதென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் கல்விக் கட்டமைப்பில் பாடசாலை நேரம், கல்விமான்கள் மற்றும் கல்வி அறிவாளர்களைக் கொண்டு கலந்துரையாடல் நடத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அது காலம் தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்படியிருக்கையில் எவருடனும் கலந்துரையாடாமல் கல்வி அமைச்சர் பாடசாலை நேரத்தை மாற்ற முயற்சிப்பதாக ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

அமைச்சர் தனித்து இந்த முடிவை எடுப்பாராயின் அதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் முழுமையான எதிர்ப்பை வெளியிடுமென அவர் கூறியுள்ளார்.

கல்வி அமைச்சர் கூறுவது போல் 1000 பாடசாலைகள் சகல வசதிகளுடனும் புனரமைக்கப்படுமாயின் மீதமுள்ள 9662 பாடசாலைகளின் நிலை என்ன? என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சகல வசதிகளுடனும் ஏற்படுத்தப்படவுள்ள 1000 பாடசாலைகள் அடுத்த வருடத்திலிருந்து காலை 7.30 தொடக்கம் மாலை 3 மணிவரை இயங்குமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேர காலத்திற்குள் பாடசாலைக்குச் சமூகமளிக்க முடியாதவர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவர் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆயிரம் பாடசாலைகளில் சிறந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை உருவாக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

# பிரிட்டன் அமைச்சருடனான ஜனாதிபதியின் சந்திப்பிற்கு ஏற்பாடுகளைச் செய்யாத வெளியுறவு அமைச்சு

(கொழும்பு)

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த பிரித்தானிய அமைச்சர் அலெஸ்ரயர் பேர்ட் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க விருப்பம் வெளியிட்டிருந்தார்.

ஆனால் அவரைச் சந்திப்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் விவகாரங்களுக்கான பிரித்தானிய நாடாளுமன்றச் செயலர் அலெஸ்ரயர் பேர்ட் கடந்த மாதம் இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

பிரித்தானியாவின் தற்போதைய அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட முதலாவது உயர்நிலைப் பிரநிதிநிதி இவரேயாவார்.

இவரது பயணம் குறித்து கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தியிருந்தது.

இதையடுத்து இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்டோருடன் சந்திப்புகளுக்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கும் பிரித்தானிய அமைச்சரின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதும் அதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவில்லை.

ஆனால் இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த பங்களாதேஷின் இராணுவத் தளபதி, தென்கொரிய அமைச்சர் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசியிருந்தார்.

இலங்கையுடன் பெருமளவு நெருக்கமில்லாத பங்களாதேஷின் இராணுவத் தளபதிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் கூட இலங்கை அதிபர் பிரித்தானிய அமைச்சருக்குக் கொடுக்கவில்லை.

கடந்த ஆண்டு இறுதியில் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்புப் போராட்டங்களால் அவசரமாக நாடு திரும்பும் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து மகிந்த ராஜபக்ஷவுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க பிரித்தானியா தவறி விட்டதாக இலங்கை அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது.

மேலும் போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்த பிரித்தானிய அரசாங்கம், தமது அமைச்சர்கள் இருவரினது கொழும்புக்கான பயணத்தையும் தடுத்திருந்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர முறுகல் நிலை காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 9ஆயிரம் இலங்கையர் நாடு திரும்பவுள்ளனர்

(கொழும்பு)

குவைத் அரசாங்கம் வழங்கியுள்ள பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி 9000 இலங்கையர்கள் நாடுதிரும்புவர் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

விசா காலாவதியான, கடவுச்சீட்டுகளை தொலைத்த வெளிநாட்டவர்கள் தாயகம் திரும்புவதற்கு ஜூன் மாதம் வரையான பொதுமன்னிப்புக் காலத்தை குவைத் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை சுமார் 1000 இலங்கையர்கள் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தை அணுகியுள்ளதாகவும் அவர்கள் குவைத்திலிருந்து வெளியேறுவதற்கான ஆவணங்கள் தயார்படுத்தப்படுவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி விக்கிரமரத்தின தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் உயர்நிலை இராணுவ அதிகாரிகள் குழு ஆறுநாள் பயணம் மேற்கொண்டு இலங்கை வருகை

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத்தின் உயர்நிலை அதிகாரிகள் குழுவொன்று ஆறு நாள் பயணமாக இலங்கைவரவுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தின் பயிற்சி மற்றும் மதிப்பீட்டுக்கான பொறுப்பதிகாரி லெப்.ஜெனரல் முசம்மில் ஹுசேன் தலைமையிலான குழுவே இலங்கை வரவுள்ளது.

இதில் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் குழுவில் பயிற்சி, நடவடிக்கை மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் இலங்கை இராணுவத்துடன் பயிற்சி, நடவடிக்கை மற்றும் முக்கியமான துறைகளில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன் இலங்கைப் படைகளின் பிரதான பயிற்சி மையங்களான பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் கல்லூரி, இராணுவப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுக்கும் இவர்கள் செல்லவுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் பாகிஸ்தான் இராணுவத் தளபதி இலக்கைக்கு மேற்கொண்ட பயணத்தை அடுத்து, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் இராணுவ அதிகாரிகளின் உயர்நிலைக் குழு இதுவாகும்.

இலங்கை- பாகிஸ்தான் படைகளுக்கிடையிலான நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்திக் கொள்வதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கைப் படைகளின் இரண்டாவது பெரிய பயிற்சிப் பங்காளர் பாகிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாகிஸ்தானுடன் ஆண்டுதோறும் 300 மில்லியன் டொலர் வர்த்தகத்தையும் இலங்கை பேணி வருகிறது.

# டெங்கு நோய்த் தடுப்புவாரம்

(கொழும்பு)

நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் டெங்கு நோய்ப் பரவலைத்தடுக்கும் வகையில் டெங்கு நோய்த்தடுப்பு வாரம் பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த மாதம் 23 ஆம் திகதியில் இருந்து 29 ஆம் திகதிவரை இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. டெங்கு நோய் பரவல் அதிகரித்து செல்வதன் காரணமாகவே, இவ்வாறு டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்த வருடத்தில் முதல் இரண்டு மாதங்களில் டெங்கு நோய்த் தொற்று காரணமாக ஆயிரத்து 894 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில், 18 பேர் பலியாகியுள்ளனர்.

இதனிடையே, ஜனவரி மாதத்தைக் காட்டிலும், பெப்ரவரி மாதத்திலேயே அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

# படையினர் தேடுதல் நடவடிக்கை வடபகுதியில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வடக்குப் பகுதியில் படையினர் மேற்கொண்டுவரும் தேடுதல் நடவடிக்கையின் போது பல்வேறு வகையான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் வடக்கின் பல்வேறு பகுதிகளான வல்வெட்டித்துறை,மாந்தை,கொக்குத்தொடுவாய்,இரணைமடு மற்றும் அளம்பில் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் கிரனைட் 5,கண்ணிவெடிகள்47, கிளைமோர்1,ஆட்லறி ஷெல் - 01,ஆர்.பி.ஜி.கிரனைட் 02 ஆகியனவே மீட்கப்பட்டன.

இதேவேளை கண்ணிவெடி அகற்றும் பிரிவு கிளிநொச்சி உட்பட பல்வேறு பகுதிகளில் மேற்கொண்ட கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது கண்ணிவெடிகள் 335,81மி.மீற்றர் மோட்டார் குண்டுகள்4, 60 மி.மீற்றர் மோட்டார் குண்டுகள் 01 என்பவற்றை மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர் அத்துமீறலைத் தடுக்க கடற்படையினர் இரவுநேர ரோந்து

(கொழும்பு)

வடக்கு கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இரவு நேர ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது இந்திய மீனவர்கள் அதிகளவில் ஊடுருவும் பகுதியான கற்கோவளம், நெடுந்தீவு, தலைமன்னார் ஆகிய கடற்பரப்பில் இந்த ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரோந்து நடவடிக்கைகள் இலங்கையின் கடல் எல்லையான 110 கடல் மைல் தொலைவுவரை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரோந்து நடவடிக்கையில் சக்தி ஜயசாகர கடற்படை ரோந்துக் கலங்களும் அதிவேக தாக்குதல் கலங்களும் மற்றும் டோராப் படகுகளும் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வீடுகள் புனரமைப்புக் கொடுப்பனவு எண்பது வீதம் பூர்த்தியடைந்தது

(கொழும்பு)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சேதமடைந்த வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக வழங்கப்படும் நட்டஈட்டுத்தொகையின் கொடுப்பனவு எண்பது வீதம் வரையில் பூர்த்தியடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

வீடுகளைத் திருத்துவதற்காக வழங்கப்படும் இந்த நட்ட ஈடுட்டக் கொடுப்பனவுத் தொகை பிரதேச செயலகங்களினூடாகவே வழங்கப்பட்டு வருகின்றது.

அண்மைய வெள்ளப் பெருக்கு,மற்றும் மண்சரிவு காரணமாக 4800 வீடுகள் முழுமையாகவும் 22,500வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இவ்வாறு முழுமையாகவும்,பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கே, இந்த நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும்,அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது.



ஓய்வுபெற்ற பணியாளர் வெ.சுப்பிரமணியம் அவர்களைக் கௌரவித்து சேவை நலன் பாராட்டு பாமாலையை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் த.பத்மானந்தன் வழங்குவதைக் காணலாம்.

# வாக்காளர் அட்டை விநியோகப்பணி எதிர்வரும் 10ஆம் திகதியுடன் பூர்த்தி

(கொழும்பு)

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் எதிர்வரும் 10ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று தபால்மா அதிபர் எம்.கே.திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் ´வியாழக்கிழமையளவில் வாக்காளர் அட்டைகளைப் பெறாத வாக்காளர்கள், சம்பந்தப்பட்ட தபாலகங்களில் தமது அடையாளத்தை நிரூபித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸநாயக்க தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று தேர்தல் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் சகல மாவட்டங்களிலுமுள்ள தெரிவத்தாட்சி அதிகாரிகள்,உயர் அதிகாரிகள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

# யுத்தம் சூறையாடிய தேசத்தை கட்டி எழுப்புவது எமது கடமை

## வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் பேச்சு



(வடமராட்சி)

எமது வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக் குடியேற அனுமதி வழங்கப்படாத நிலைமை நீடித்த போது பலத்த முயற்சிகளின் பின் முதன்முதலாக புனித பிலிப்பு நேரியார் தேவாலயத்தின் திருவிழாவிற்கு நாம் எல்லோரும் ஒரு கூட்டமாக வந்த சமயம் யுத்தத்தால் சூறையாக்கப்பட்ட எமது வாழ்விடங்களைக் கண்டவுடன் எமக்கு முன்னால் பாரிய கடமை உண்டு என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். அந்தக்கடமைகளையே தற்போது படிப்படியாக எமது கட்சி பூர்த்தி செய்து வருகின்றது என வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான ஜயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலைவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 4ஆம் திகதி பாடசாலை அதிபர் திரு. சி.ஜெயந்திரன் தலைமையில் இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்த நாம் தற்போது மீளக்குடியேறியுள்ளோம். கூரை இல்லாத வீடுகளும் கதவு நிலை இல்லாத கட்டடங்களுமே எஞ்சியுள்ளது. எமது பாடசாலையின் வளங்கள் அனைத்தும் இல்லாமல் போயுள்ளன. தற்போது வளங்களைத் தேடியே பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்குத் தேடலும் முயற்சியும் நம்பிக்கையுமே அவசியமாகின்றது.

நீங்கள் ஏழையாகப் பிறந்தால் அது உங்கள் குற்றமல்ல.• ஆனால் ஏழையாகவே இறந்தால் அது உங்கள் குற்றம் தான் என பில்கேட்ஸ் என்ற தொழிலதிபர் சொல்லியுள்ளார். எனவே அக்குற்றத்தை நாம் இழைக்காமல் நம்பிக்கை கொண்டு முன்னேறுவோம்.

எங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது மீள்குடியேற்றப் பகுதியை புனரமைப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றார். ஆண்டு 06க்கு கீழ் வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாகவும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலையாகவும் உள்ள எமது பாடசாலையின் அறிவியல் திறனை வளர்த்து எமது பகுதிக்கு பெருமை சேர்க்க மாணவர்களை பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பாடசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து பாடசாலை மாணவர்களுக்கு தளபாடக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கியதுடன், பாடசாலைக்கென சிடிஎம்ஏ தொலைபேசியும் வழங்கியதுடன் பாடசாலையை புனரமைக்க என்ரிப் திட்டத்தின் சிபார்சும் வழங்கியுள்ளார் எனத் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் உட்பட மேலும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## நெடுந்தீவு தூங்காலையில் இருதயநாதர் ஆலயம் திறப்பு



யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை நெடுந்தீவு தூங்காலையில் புதிதாக அமைக்கப்பட்ட இருதயநாதர் தேவாலயத்தை கடந்த 4 ஆம் திகதி திறந்து வைத்தார்.

முன்பதாக நெடுந்தீவு மக்கள் ஆயர் அவர்களை மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

தொடர்ந்து அங்கு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்களால் விசேட நற்கருனை வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட இத் தேவாலயத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 2009 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாவினை ஒதுக்கியிருந்தார்.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு அமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளர் ரஜீவ், நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் புலவர் அரியநாயகம் உட்பட அப்பிரதேச மக்கள் பெருமளவில் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் சுவரொட்டிகள் அடுத்தவாரம் அகற்றப்படும்

(கொழும்பு)

தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை எதிர்வரும் 14 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னதாக அகற்ற வேண்டும் என வேட்பாளர்களிடமும், பொலிஸாரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையின்படி அகற்றப்படாத பிரசார அறிவிப்புகளை அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மாஅதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சட்டவிரோதமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தேர்தல் பிரசாரங்களை அகற்றும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, தேர்தல் வன்முறைகள் குறித்த 106 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், குறித்த சம்பவங்கள் தொடர்பில் 135 பேர் வரை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மஹர பிரதேச சபைக்காக போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பெண் வேட்பாளர் ஒருவரின் மீது நேற்று முன்தினமிரவு, ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் உட்பட்ட ஆதரவாளர்கள் மூவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணியான குறித்த வேட்பாளர் தற்சமயம் ராகமை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடவத்தைபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வர்த்தகர் கடத்தப்பட்டதாக மனைவி முறைப்பாடு

(கொழும்பு)

வர்த்தகரான தனது கணவர் இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்தப்பட்டதாகவும், ஒரு மில்லியன் ரூபாய் கப்பப்பணம் வழங்கப்பட்ட நிலையில் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் சூரியவெவ பொலிஸ் நிலையத்தில் பெண்ணொருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி தனது கணவர் கடத்தப்பட்டதாகவும் அப்பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## பொதுமக்களின்...

முடிவடைந்து 20 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், அங்கு முழுமையானளவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. இந்நிலையில், அங்கு வீட்டுத் திட்டங்கள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உரிய முறையில் மீள்குடியேற்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

ஏற்கெனவே மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்வாதாரமின்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இம்மக்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை பெற்றுக்கொள்ளும் வரையில் சிறியளவில் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை, மட்டக்களப்பில் மீள்குடியேற்றப்பட்ட 1,211 குடும்பங்களின் காணிகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதால் இம்மக்கள் மீளவும் திருகோணமலை நலன்புரி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பட்டித்திடல் பகுதியில் 223 குடும்பங்களும், மனாச்சேனையில் 70 குடும்பங்களும், கிளிவெட்டியில் 575 குடும்பங்களும் கட்டைப்பறிச்சானில் 343 குடும்பங்களும் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

## ஈ.பி.டி.பி...

அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் ஆகியோரால் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்நிகழ்வில் உரையாற்றிய முருகேசு சந்திரகுமார் அவர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடனான கலைஞர்களின் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்ட கலைஞர்களின் ஆலோசனையானது நேற்று செயல்வடிவம் பெற்றுள்ளது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், கலைகள் மட்டுமல்ல கலைஞர்களும் வாழவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார் எனக்குறிப்பிட்டார்.

சந்திரகுமார் அவர்களின் உரையினைத் தொடர்ந்து ஈழத்து சௌந்தரராஜன் எனப்புகழ் பெற்ற பாடகர் அருள்ஜோதி உரையாற்றுகையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலைஞர்களை வாழவைப்பவர் எனக்கூறியதுடன் இப்பதிப்பிற்காக ஏறக்குறைய இருபத்தைந்து பாடல்களைப் பாடியுள்ளதாகவும் அதிலிருந்து பத்துப்பாடல்கள் இந்த இறுவட்டில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் தொடர்ச்சியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் நிகழ்விற்கு சமூகமளித்திருந்த பிரமுகர்களுக்கு இறுவட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.மாவட்ட ஈபிடிபி அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை பீடாதிபதி சீ.கணபதிப்பிள்ளை திருமுருகன் வணிக உரிமையாளர் முருகன் வடகடல் நிறுவன தலைவர் எஸ். ஏ.பரந்தாமன் கல்வியாளர் சிறிபதி, ஆசிரியர் சாரங்கா இசைக்குழுவைச் சேர்ந்த வாசன் ஈழத்தின் பிரபல பாடகர்கள் சாந்தன் மற்றும் சுகுமார் அறிவிப்பாளர் சற்குணமூர்த்தி பிரமுகர் நாகேந்திர சர்மா ஆகியோர் அமைச்சரிடமிருந்து இறுவட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

நேற்றைய இறுவட்டு வெளியீட்டு நிகழ்வின் நிறைவாக உரையாற்றிய ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூடிய நேரத்தை மக்கள் பணிக்காக எமது கடந்தகால சாதனைகளை சரியான முறையில் மக்களிடம் எடுத்துச்செல்ல உரிய வாய்ப்புக்கள் கிட்டியிருக்கவில்லை. நாம் விளம்பரத்தை விரும்புபவர்கள் அல்ல.

ஆயினும் எமது கட்சியின் செயற்பாடுகளும் சாதனைகளும் மக்களிடம் போய்ச்சேர வேண்டும் எனும் நோக்கில் கலைஞர்கள் முன்வந்து உருவாக்கியுள்ள இவ்விறுவட்டிற்காகவும் அதற்கு பின்புலமாக நின்று உழைத்த தோழர் விந்தனை பெரிதும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

## அமெரிக்க...

மூலம், அமெரிக்க இராணுவத்தின் பல்வேறு முக்கிய விடயங்கள் வெளியிடப்பட்டன.

இதன் மூலம், ஈராக் மற்றும் ஆப்கானில் அமெரிக்க இராணுவத்தினரின் மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்துக்கு வந்தன. அமெரிக்க இராணுவ ரகசியங்களை, வீக்கிலீக்ஸ் இணையதளத்துக்கு கொடுத்ததாக, அமெரிக்க இராணுவ வீரர் பிராட்லி மேனிங் (வயது -23) என்பவர் கைது செய்யப்பட்டார்.

ஏழு மாதங்கள் வரை. இவரைக் காவலில் வைக்க, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விர்ஜினியாவில் உள்ள கடற்படை சிறை வளாகத்தில் தற்போது இவர் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பிராட்லி மேனிங்கிற்கு, சிறை அதிகாரிகள் விசித்திரமான தண்டனையை வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


வாரத்துக்கு, குறைந்தது ஒரு நாளாவது ஆடைகள் இல்லாமல் தூங்க வேண்டும் என அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தகவலை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனும் உறுதிப்படுத்தியுள்ளது.

இராணுவத் தலைமையக செய்தித் தொடர்பாளர் டேவ் லாபன் கூறுகையில், பிராட்லி மேனிங்குக்கு தண்டனை வழங்கப்பட்டது உண்மைதான்: இருந்தாலும், அது குறித்து விரிவாக எதுவும் பேச விரும்பவில்லை.

## சர்வதேச பல்கலை...

அமைச்சு தெரிவித்துள்ளது

இதற்கிணங்க 25 பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் இராஜினாமா

## நன்கொடை நிதி பெற்றதாகக் குற்றச்சாட்டு!

## பிரதமருக்கு வந்த புதிய தலைவலி

(டோக்கியோ)

வெளிநாடொன்றிலிருந்து நன்கொடையாக நிதி பெற்றுக்கொண்டதால் சர்ச்சைக்குள்ளான ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் சேய்ஜி மேஹறா ராஜினாமா செய்துள்ளார்.

தென்கொரியாவில் வசிக்கும் ஒருவரிடமிருந்து 50,000 யென்களை (சுமார் 67,054 இலங்கை ரூபா) தான் அன்பளிப்பாக பெற்றுக்கொண்டதை கடந்த வெள்ளிக்கிழமை சேய்ஜி மேஹறா ஒப்புக்கொண்டிருந்தார்.

ஜப்பானிய சட்டங்களின்படி தெரிந்துகொண்டே இவ்வாறு நன்கொடை பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் ஜப்பானிய பிரதமர் நவோட்டா கானுக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் மேஹறா ராஜினாமா செய்யவேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரின. அதையடுத்து அவர் நேற்று ராஜினாமா செய்துள்ளார்.

இந்த அன்பளிப்பு சிறிய தொகை என்ற போதிலும் வெளிநாடுகளிலிருந்து இவ்வாறு அன்பளிப்புப் பெறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சக்திகள் ஜப்பானிய அரசியலில் செல்வாக்குசெலுத் துவதை தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இவ்விவகாரம் தொடர்பான ஜப்பானிய மக்களிடம் மன்னிப்பு கோருவதாக சேய்ஜி மேஹறா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் ஜப்பானிய பிரதமர் நவோட்டா கான் மீதான அழுத்தங்களை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்



கெனவே நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதிற்கு அவர் திணறி வருகிறார். எதிர்க்கட்சிகளோ விரைவில் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி வருகின்றன.

சேய்ஜி மேஹறா அடுத்த பிரதமராக தெரிவாகக்கூடும் எனவும் முன்னர் கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வலி.வடக்கு கரையோர மக்கள் இன்று முதல் மீள்குடியேற அனுமதி

(மாதகல்)

வலிகாமம் வடக்கின் சேந்தாங்குளம் கடற்பிராந்தியத்தில் விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடை இன்று முதல் அகற்றப்படும். அந்த பிரதேசத்தின் கரையோரப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமரவும் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இளவாலை வடமேற்கு வித்தகபுரம், இளவாலை வடக்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், மாதகல் சேந்தாங்குளம் பிரதேசத்தில் அந்தத் தடை தொடர்ந்து அமுலில் இருந்தது.

இந்த நிலையில், குறித்த பிரதேசத்திலிருந்து வெளியேறிய 80 குடும்பங்கள் மீள குடியமர்வதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை வழமை போல மேற்கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கருத்து தெரிவிக்கையில், குறிப்பிட்ட இந்த பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளமை குறித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பான, தமது பரிந்துரைகள் பாதுகாப்பு படைத்தரப்பினருக்கு அறிவித்துள்ளதாகவும், அதனை அண்டிய பிரதேசங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் கடந்த டிசம்பர் மாதம் முதல் படிப்படியாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# ஹெரோயின் மறைந்த மர்மம் என்ன? பொலிஸார் இருவர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நேற்று முதல் பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்ட 16.5 கிராம் ஹெரொயின் போதைப்பொருள் மர்மமான முறையில் காணமற் போயுள்ள சம்பவம் தொடர்பாகவே இவர்கள் இருவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன் பொலிஸாரினால் இரு வெவ்வேறு இடங்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட 16.5 கிராம் ஹெரொயின் போதைப் பொருள் பொலிஸ் களஞ்சியத்திருந்து நீதிமன்றம் கொண்டு செல்லும் போதே மாயமான முறையில் மறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை நடத்திய பொலிஸார் இப்போதைப் பொருளை களஞ்சியப்படுத்திய மற்றும் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணை களை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்கப் பங்குச் சந்தை மோசடி; தமிழ் வர்த்தகருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகளில் முன்கூட்டியே விபரங்களை சேகரித்தார் என்ற குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இலங்கை தமிழரது விசாரணைகள் நாளை இடம் பெறவுள்ளன.

கோடீஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரட்ணத்தின் வழக்கறிஞர்கள் இந்த நீதிமன்ற விசாணைகள் குறித்து தகவல் தருகையில், தமது தரப்பினர் எந்த விதமான ஊழல் நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளனர்.

அவரின் கைது தொலைபேசி உரையாடல்களை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, நாளை ஆரம்பமாகும் விசாரணைகள் சில மாதங்களுக்கு தொடர்ந்தும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் நீண்ட கால சிறைத்தண்டனை வழங்க முடியும் என சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இந்தோனேசியாவில் தமிழ்கைதிகள் சமூகத் தடுப்புக் காவலுக்கு மாற்றம்

(கொழும்பு)

இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஐக்கிய நாடுகள் சபையினால் அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் சமூக தடுப்புக் காவலுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு, இலங்கைத் தமிழர்கள் 254 பேர், அகதிகளாக அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லும் வழியில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், இவர்கள், 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இந்தோனேசியாவில் தடுப்பு முகாமொன்றில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், ஐக்கிய நாடுகளால் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள் தற்போது சமூக சிறைக்கு மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சமூக சிறை என்பது, ஒரு குறித்த பகுதிக்குள் இவர்கள் சுதந்திரமாக நடமாடி திரிய முடியும்.

அத்துடன் வழங்கப்பட்டுள்ள நேரத்திற்குள் இவர்கள் தமது வசிப்பிடங்களுக்கு திரும்ப வேண்டும் என்பதுவுமே இந்த சமூக சிறையின் அடிப்படை விதிகளாக காணப்படுகின்றன.

இந்த நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களை தற்சமயம் படிப்படையாக சமூக சிறைக்கு மாற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

## இலங்கை மீது...

தடைகள் விதிக்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதகமான நிலைமை ஏற்படும் என முன்னாள் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் சார்லி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கைத் தூதரகங்களின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் புலம்பெயர் சமூகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கை எதிர்ப்பு மற்றும் யுத்தக் குற்றப் பிரச்சாரங்களை முறியடிக்கும் வல்லமை இலங்கை தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கு கிடையாது என அவர் தெரிவித்துள் ளார்.

இலங்கைத் தூதரகங்கள், நாட்டின் தமிழ் மக்கள் மனித உரிமைப் பிரச்சினைகளை எதிர்நோக்கவில்லை என்பதனை உலக சமூகத்திற்கு வலுவாக எடுத்துரைப்பதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அநேகமான இராஜதந்திரிகள் அரசியல் ரீதியான நியமனங்கள் என்பதனால் போதியளவு இராஜதந்திர அறிவு அவர்களிடம் காணப்படுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே உலகின் பல நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்ற விளைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பஸ்போக்குவரத்து...

றிவதற்கு ஏற்கெனவே ஜி.பி. எஸ். கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் மூலம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்படி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பஸ்களின் நகர்கள்வுகள் கண்காணிப்பு நிலையங்களிலுள்ள டிஜிட்டல் திரைகளில் காண்பிக்கப்படும். தவறிழைக்கும் சாரதிகள் உடனடியாக செய்மதி தொலைபேசி மூலம் எச்சரிக்கப்படுவர் என தேசிய போக்குவரத்து ஆணைக்கு தெரிவித்துள்ளது.

கொழும்புக்கும் தென்பகுதியிலுள்ள பல நகரங்களுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 70 பஸ்கள் ஏற்கெனவே இந்த கண்காணிப்பில் உள்ளதாகவும் அடுத்த வாரம் முதல் நீண்ட தூர பஸ்களும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச...

ஜீ.ஏ. சந்திரசிறி கலந்துகொள்ளவிருக்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் "வினைத்திறன்மிக்க பெண்களும் குடும்ப மேம்பாடும்" எனும் தலைப்பிலான கருத்தாடலினை கலாநிதி மனோன்மணி சண்முகதாசும், யாழ்ப்பாணக்கலாசார "விழுமியங்களில் பெண்கள்" எனும் தலைப்பிலான கருத்தாடலினை சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலுவும் "யாழ்ப்பாண கலாசாரமும் திருமண முறியும்" எனும் தலைப்பிலான கருத்தாடலினை கலாநிதி செ. திருநாவுக்கரசு நிகழ்த்துவதுடன் "தூக்கி எறியப்படாத கேள்வியாய்" எனும் தலைப்பிலான யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் சிறப்பு நாடகமும் இடம்பெறவுள்ளன. (ஜெ)

## சிஷ்ட...

ஆசிரியரும் ஆவார்.தினகரன் பத்திரிகையின் ஆசிரிய ஆலோசகராகவும் அவர் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

தகவல் திணைக்கள இதழியல் பயிற்சி நெறியின் போதா னாசிரியரான இவர், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்க விருது வழங்கல் தெரிவுக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் ஆவார்.

இவர் யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்டவராவார். பல நூல்களையும் இவர் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை சற்குணதேவி

துவாளி வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சற்குணதேவி கடந்த 05.03.2011ஆம் திகதி சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) அன்பு மனைவியும், சுதர்சன், கோபிநாத், வசீகரன், ஜினேந்ததாஸ் (இந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்சினி, நவீனா, துஷிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்மிலன், பிரித்தி, நிலக்ஷன், விசாலி, கிருஷானி, அபிஷானி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற சதாசிவம், செல்வராசா மற்றும் சேனாதிராசா, சற்குணராசா, துரைராசா, செல்வமணி, கமலாதேவி, ரஞ்சிதமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 07.03.2011 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :
021 226 3362, 021 321 8586 (109) தகவல் : குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

27. கூட்டில் உள்ள முதுமொழியில் மிகவும் என்னும் கருத்தைத் தரும் சொல் யாது?
   1. முன்னறி   2. சாலவும்   3. நன்று

**கீழுள்ள வினாக்களில் சரியான விடையின் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

28. கூட்டினுள் காணப்படும் நிகழ்வுகளுடன் மிகப்பொருத்தும் சொல் எது?

அம்மா! அம்மா! என்று அழைப்பான்
உணவு கொடுத்தால் உண்பான்
வயிறு நிறைந்ததும் வாழ்த்துவான்
வரும் போதெல்லாம் வந்து போவான்.

   1. அம்மாவின் மகன்.
   2. வீட்டு வேலைக்காரன்.
   3. உறவுக்காரன்.
   4. பிச்சைக்காரன்

(.........................................)

29. கூட்டினுள் காணப்படும் கூற்றுக்குரியவர் யார்?

நல்ல காலம் பிறக்கிறது: நல்ல காலம் பிறக்கிறது.
வீட்டில் உள்ள எல்லோருக்கும் நல்லது நடக்கப்போகுது...

   1. கோயில் பூசாரியின் கூற்று   2. சோதிடரின் கூற்று
   3. குடுகுடுப்பைக் காரனின் கூற்று   4. கடவுளின் கூற்று   (.........................................)

30. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்னும் முதுமொழியின் கருத்துடன் பொருந்தும் பிறிதொரு முதுமொழி எது?
   1. ஒன்றே குலம் ஒருவனே தேவன்   2. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
   3. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

31. "ஆழம் அறியாமல் காலை விடாதே" என்னும் பழமொழியின் உள்ளார்ந்த கருத்து யாது?
   1. ஆழம் அறிந்துதான் காலை விடவேண்டும் என்பதாகும்.
   2. ஆராய்ந்து அறியாமல் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது என்பதாகும்.
   3. காலுக்கேற்ற ஆழம் இருப்பின் காலை விடலாம் என்பதாகும்.

**32ஆம், 33ஆம் வினாக்களில் சில பொருட்களின் இரகசியக் குறியீட்டு விலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து விடை தருக.**

32. | 685.00 - MVR..AA | இதன்படி RAV.RA என்பதன் விலை யாதாக இருக்கும்?
   1. 508.00   2. 805.00   3. 508.50

33. | OKLR..CC - 5467.00 | இதன்படி 675.40 என்பதன் இரகசியக் குறியீடு யாது?
   1. LRO.KC   2. LRO.CC   3. LRO.CK

**34 ஆம், 35 ஆம் வினாக்களில் கூற்றுத் தொடர்பான சரியான விடையின் கீழ் கீறிடுக.**

34. கழிவுப் பொருட்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும். இக்கூற்றுக்குப் பொருந்தாத கூற்று எது?
   1. கழிவுப் பொருட்களில் ஆக்கப்பட்ட பொருட்களைச் செய்ய வேண்டும்.
   2. கழிவுப் பொருட்களை வீட்டில் சேமித்து வைக்க வேண்டும்.
   3. கழிவுப் பொருட்களை மீள் உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

35. தொலைக்காட்சி பார்ப்பதால் அறிவு வளர்ச்சி அடைகிறது. அதேநேரம் கல்வியும் பாதிப்படைகின்றது. இக்கூற்றுடன் மிகப்பொருந்தும் கூற்று எது?
   1. மாணவர்கள் எந்நேரமும் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது.
   2. பெரியவர்கள் எந்நேரமும் தொலைக்காட்சி பார்க்கலாம்.
   3. சிறியவர்களை வைத்துக்கொண்டு தொலைக்காட்சி பார்க்கக் கூடாது.

36. 40, 37, 34, 31, ......... அடுத்து வரும் எண் யாது?.   ..................................................

37. வானொலி: கேட்டல் எனின் தொலைக்காட்சி:   ..................................................

38. சாந்தகப்பை, தூக்குக்குண்டு போன்றவற்றைப் பயன்படுத்துபவர்   ..................................................

39. XI என்ற உரோமன் குறியின் இலக்கம் யாது?   ..................................................

40. பாற்சோறு என்பதைப் பிரித்து எழுதினால்   ............................................. + .............................................






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்


# கல்வி முரசு

வெளியீடு 04



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**கீழே காணப்படும் பிராணிகள் தொடர்பான 1-3 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**






1. வாழும் இடம், நகரும் முறை, உண்ணும் உணவு ஆகியவற்றில் ஒற்றுமையுடைய பிராணிகள் இரண்டும் எவை?
   1. A, B   2. B, D   3. C, F

2. A, F ஆகிய இரு பிராணிகளினதும் பொதுவான இயல்பு பின்வருவனவற்றில் எது?
   1. இரவில் இரை தேடிச் செல்வன.   2. தத்தித் தத்திப் பாய்ந்து திரிவன.
   3. செவிகளை உயர்த்தி ஒலிகளைச் செவிமடுப்பன.


3. என்னால் நடக்க முடியும், ஓடவும் முடியும், பறப்பதற்கான இறக்கைகளும் என்னிடம் உள்ளன. நான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பேன். நான் யார்?
   1. கோழி   2. காகம்   3. ஆமை

**4ஆம், 5ஆம் வினாக்களில் காணப்படும் படங்கள் தொடர்பான நான்கு சொற்களில் ஒருசொல் அப்படத்திற்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவுசெய்து விடையின் இலக்கத்தை அடையாளம் இடுக.**

4. 
   1. ஒளி   2. பகல்   3. குளிர்ச்சி   4. வெப்பம்

5. 
   1. நீந்தும்   2. நடக்கும்   3. மிதக்கும்   4. உறங்கும்

**6ஆம், 7ஆம் வினாக்களில் முதல் மூன்று உருக்களினதும் மாறுதல்களை அவதானித்து நான்காவது உருவை உரிய முறையில் நிழற்றிக் காட்டுக.**

6. 
   1)   2 )   3)   4)

7. 
   1)   2 )   3)   4)

**8ஆம் வினாவில் முதல் மூன்று உருக்களினதும் எழுத்துச் சுற்றுக்கோலத்தை இனங்கண்டு நான்காவது உருவின் கோலத்தைப் பூரணப்படுத்துக.**

8.

| | |
|---|---|
| பு | க |
| று | ப் |

2)

| | |
|---|---|
| று | பு |
| ப் | க |

3)

| | |
|---|---|
| ப் | று |
| க | பு |

4)


| | |
|---|---|
| க | …… |
| …… | று |

9. விளக்கு ⟶ வெளிச்சம் : கல்வி ⟶ ………………………


1. பணம் 2. அறிவு 3. தாவரம்

**கீழ் வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்க.**


10. இவ்விடத்தில் நீக்கப்பட்ட பகுதிக்குப் பொருந்தக் கூடிய பகுதி எதுவெனக் கோடிடுக.




11. கணிதக் குறியீடுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கணிதச் செய்கைக் கோலத்தினை இனங்கண்டு A, B ஆகிய கூடுகளில் வரவேண்டிய எண்களைக் கண்டறிந்து அருகே உள்ள கூடுகளில் எழுதுக.




12.





A யிலிருந்து B வரை ஒரு கார் பயணம் செய்தது. A யிலிருந்து B வரையிலான தூரம் 160 மீற்றர் ஆகும். தற்போது ஆரம்ப இடத்தில் இருந்து எத்தனை மீற்றர் தூரத்தில் கார் சென்று கொண்டிருக்கிறது?

………………………………

13. A என்பவருக்கு B யும் C யும் பிள்ளைகளாவர். B என்பவருக்கு D யும் E யும் பிள்ளைகளாவர். இக் கூற்றுக்களின் படி இவர்களின் பிள்ளைகளாகவும், தந்தையாகவும் கூறப்பட்டிருப்பவர் யார்?

………………………………




14. கைகளைப் போன்ற கால்கள், கண்களைத் தோண்டி உண்ணும், காட்டில் மட்டும் வாழும், கொம்பு இல்லாத மிருகம். அது எது?
   1. குதிரை 2. புலி 3. கரடி

**ஐந்தாம் தர மாணவன் ஒருவன் கூறிய கூற்று பின்வருமாறு**

நான் கணிதப் பாடத்தில் 80 புள்ளிகளைப் பெற்றேன். நண்பன் பிரவீன் என்னைவிட 15 புள்ளிகள் அதிகமாகப் பெற்றான். பிரவீனைவிட பரதனுக்கு 30 புள்ளிகள் குறைவாகும்.

15. பரதனின் கணிதப்பாடப் புள்ளி யாதாக இருக்கும்?
   1. 50 புள்ளிகள் 2. 65 புள்ளிகள் 3. 95 புள்ளிகள்

16. அதிக புள்ளிகள் பெற்றவர் யார்?
   1. பிரவீன் 2. நான் 3. பரதன்





17. ராணியின் வயதைவிட மஞ்சுவின் வயது நான்கு குறைவாகும். மஞ்சுவின் வயதைவிட தர்ஷாவின் வயது ஐந்து அதிகமாகும். எனவே ராணியின் வயது 30 எனின் தர்ஷாவின் வயது யாதாக இருக்கும்?
   1. 30 வயது 2. 26 வயது 3. 31 வயது

18. ராகவனிடம் உள்ள பணத்தைப் போன்று மூன்று மடங்கு என்னிடம் உள்ளது. என்னிடம் உள்ளது 45 ரூபா எனில் ராகவனிடம் உள்ளது எவ்வளவு?
   1. 10 ரூபா 2. 15 ரூபா 3. 20 ரூபா

19. ஆறு மாணவர்கள் படிப்பதற்கு இரண்டு மேசைகளும், நான்கு கதிரைகளும், இரண்டு புத்தகங்களும் வழங்கப்பட்டன. இதன்படி மூன்று மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முறை யாது?
   1. ஒரு மேசை, ஒரு கதிரை, ஒரு புத்தகம் 2. ஒரு மேசை, மூன்று கதிரை, ஒரு புத்தகம்
   3. ஒரு மேசை, இரண்டு கதிரை, ஒரு புத்தகம்

20. 2 பெரிய பூக்கள் வரையக்கூடிய இடத்தில் 6 சிறிய பூக்கள் வரைய முடியும். எனவே 9 சிறிய பூக்கள் வரையக் கூடிய இடத்தில் எத்தனை பெரிய பூக்கள் வரைய முடியும்?
   1. 3 பெரிய பூக்கள் 2. 4 பெரிய பூக்கள் 3. 5 பெரிய பூக்கள்

**21ஆம், 22 ஆம் வினாக்களுக்கு அடுத்துவரும் எண்களை எழுதுக.**

21. 210 ⟶ 321 ⟶ 432 ⟶ 543 ⟶ ☐

22. 101 ⟶ 212 ⟶ 323 ⟶ 434 ⟶ ◯

**கீழுள்ள அட்டவணையில் நிரையாகவும் நிரலாகவும் எண்கள் கூட்டப்பட்டுள்ளன. சில கூடுகளில் எண்கள் இடப்படாமலும் உள்ளன. அவற்றை அவதானித்து விடைதருக.**

23.


| | | | | |
|---|---|---|---|---|
| A | + | 10 | = | 60 |
| + | | | | |
| B | + | C | = | D |
| 70 | + | 20 | = | 90 |

1) A என்னும் கூட்டில் வரக்கூடிய எண்யாது?

………………………………

II) B+ C= D ஆகிய கூட்டில் வரக்கூடிய எண்களைக் காட்டும் சரியான விடை எது?
   1. 20+30=10 2. 20+10=30 3. 10+30=50

**கீழே சில வீதிகளின் அமைவிடம் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து விடைதருக.**




A, B, C, D, E, F, G ஆகிய இடங்கள் சந்திகளாகும். அ, ஆ, இ, ஈ, உ, ஊ ஆகியவை நகரங்களாகும்.

24. "ஆ" என்னும் நகரத்திலிருந்து "ஈ" என்னும் குறுகிய தூரப் பாதைகளால் ஒருவர் சென்றடைந்தார். எனவே அவர் சென்ற பாதையைக் காட்டும் விடை யாது?

1) ஆ ⟶ G ⟶ F ⟶ B ⟶ C ⟶ ஈ 2) ஆ ⟶ G ⟶ F ⟶ E ⟶ D ⟶ C ⟶ ஈ
3) ஆ ⟶ G ⟶ F ⟶ E ⟶ D ⟶ உ ⟶ ஈ

25. (பாதை வழியே செல்வதாயின்) மிகக் குறைந்த இடைத்தூரத்தைக் கொண்ட இரு நகரங்களும் எவை?
   1. ஆ - இ 2. உ - ஊ 3. ஈ - உ

**கீழே கூட்டினுள் காணப்படும் முதுமொழியை வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைதருக.**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று

26. "முன்னறி தெய்வம்" என்பது
   1. முன்னால் உள்ள தெய்வம் 2. முன்னேற்றம் தரும் தெய்வம் 3. முதலில் அறிந்த தெய்வம்